# சங்கீதம்

காலக்கணிப்பு

| | |
|---|---|
| **சங்கீதம் 90 மோசேயினால் எழுதப்பட்டது** | 1406 **கி.மு** ? |
| எதாவீதின்பிறப்பு,மேய்ப்பன், இசைக் கலைஞன், ராஜா, சங்கீதக்காரன் | 1041 |
| சிறையிருப்பினின்று இஸ்ரவேலர்களின் மீட்சி (சங் 126?) | 538 |

**பின்னனி**

சங்கீதப்புத்தகம் பல சங்கீதங்களினதும், பாடல்களினதும் சேர்ப்பு புத்தகமாகும், இவைகள் 900 வருடங்களாக பல விதமான இஸ்ரவேலர்களால் எழுதப்பட்டன.

அனேக சங்கீதங்கள் குறிப்பாக ஆராதனைக்கு உரியவைகளாகும், அதேநேரம் மற்றவைகள் தனிப்பட்ட ஆராதனைகளுக்கும், ஆழ்ந்த சிந்தனைகளும் உரியவைகளாகும். சங்கீதப்புத்தகம் ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் துதிப்பாடலுடன் முடிவடைகின்றன.

ஒவ்வொரு பகுதியும் சரித்திர முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கின்றன என்று அனேக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள், முதலம் பகுதியும் இரண்டாம் பகுதியும் தாவீதின் காலத்தில் அல்லது அதற்குப் பிந்திய சொற்பகாலத்தில் தொகுக்கப்பட்டுள்ளன, மூன்றாம்பகுதியும் நான்காம் பகுதியும் இஸ்ரவேலின் வீழ்ச்சிக்குப்

பிற்பாடு சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் ஐந்தாம் பகுதி சிறையிருப்பிலிருந்து மீண்ட பிற்பாடு எழுதப்பட்டுள்ளன.

மற்றவர்கள் இஸ்ரவேலின் ஐந்து நியாயப்பிரமாணங்களின் பிரிவுகளுக்கு ஏற்ப ஐந்து துதிப்புத்தகங்களாகப் பார்க்கிறார்கள்.

சங்கீதங்கள் நீண்ட சரித்திர ஆய்வுக் கருப்பொருள்களுடன் தொடர்புள்ளதாக இருக்கின்றன.

அனேக சங்கீதங்கள் தலைப்புக்களைக் கொண்டுள்ளன, சில சரித்திரப்பின்னணியை விபரிக்கும் நோக்கம் கொண்டவையாக இருக்கின்றன.

**எழுதியவர்.**

அனேக சங்கீதங்கள் எழுதியவர்களின் பெயர்களுடன் காணப்படுகின்றன.

• இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது குறைந்தது அரைப்பகுதி சங்கீதங்களை எழுதியுள்ளார்.
• ஆசாப், லேவியன், ஆசாரிப்புக் கூடாரத்தின் வாத்தியக்காரன் (1நாளா. 15:16-17) அல்லது அவருடைய சந்ததியில் ஒருவன் இவர் குறைந்தது 12 சங்கீதங்களை எழுதியுள்ளார். (50 73–83).

• கோராவின் சந்ததி, ஆசாரியன், அவர் மோசேக்கு எதிராக கலகம் செய்தவர் (எண். 16)இ குறைந்தது 12 சங்கீதங்களை எழுதியுள்ளார். (1நாளா.6:33)

சங்கீதம் 88 கேமான் எழுதியுள்ளார்.

• சாலொமோன் இஸ்ரவேலின் ராஜா சங்கீதம் 72 ஐயும், 127 ஐயும் எழுதியுள்ளார்.

• 90 பழைய சங்கீதமாகிய 90 ஐ இஸ்ரவேலுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவரும், மீட்பருமாகிய மோசேயினால் எழுதப்பட்டது.

• சில சங்கீதங்கள் எசேக்கியாவினால் எழுதப்பட்டதாக சிலர் கூறுகின்றார்கள்.

• ஈதான் சங்கீதம் (89) எழுதியுள்ளார்.

• 34 சங்கீதங்கள் பெயர் குறிப்பிடப்படாதவையாகும்.

**திகதி.**

சங்கீதங்கள் மோசேயின் காலத்திலிருந்து 900 வருடகாலங்களாக எழுதப்பட்டுள்ளன. (90ம் சங்கீதம் 1405.கி.மு. இல் எழுதப்பட்டது) பாபிலோனிலிருந்து சிறையிருப்பிலிருந்து மீண்டது (126, 147–150 500.கி.மு.)

**நோக்கம்.**

சங்கீதங்களின் நோக்கங்கள் எழுத்தாளரைப் பொறுத்தும், சம்பவங்களைப் பொறுத்தும் நோக்கங்கள் வேறுபட்டுள்ளன.

• எல்லாச் சங்கீதங்களும் விசுவாசிகளின் கவனத்தை ஈர்க்கின்றன, கர்த்தரின் குனாதிசயங்களும், விசுவாசிகளின் வாழ்வில் அவரால் செய்யப்படும் செயற்பாடுகளும் விசுவாசிகளின் கவனத்தை ஈர்க்கின்றன. இவைகள் தனிப்பட்ட ஆராதனையிலும், பொது ஆராதனையிலும் பயன்படுத்தப்படுகின்றன வெளிப்பாடுகளாகும்.

• அனேக சங்கீதங்கள் இஸ்ரவேலர்களின் சரித்திரத்தில் செய்யப்பட்ட செயற்பாடுகளைப் போதிக்கின்றன. அனேக விசுவாச செயற்பாடுகளை ஊக்குவிக்கும் சங்கீதங்களாக அமைந்துள்ளன. (எபேசி.5:19.)

• அனேக சங்கீதங்கள் மேசியாபற்றிய தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்துகின்றன.

• சங்கீதம் 6,32, 51 போன்ற சங்கீதங்கள் தனிப்பட்ட ஜெபங்களையும், அறிக்கை செய்வதையும், மனம்திரும்புதலையும் கொண்டுள்ளன.

• சங்கீதம் 7,35, 55, 109 போன்றவை கெட்டவர்களை தண்டிக்கும்படியான விண்ணப்பங்களாக உள்ளன. கர்த்தருடைய கிருபையையும், அன்பையும் இழக்கச் செய்யும் வேண்டுதலாக உள்ளன.

» கர்த்தருடைய நியாயப்பிரமாணம் மீறுவதனால் கடும் வெறுப்பு ஏற்படும், அது தனிப்பட்ட மனத்தாங்கலல்ல.

» சங்கீதக்காரர்கள் தாங்கள் பழிவாங்குவதைத் தவிர்த்து இந்த உணர்வுகளை சரியாக ஜெபத்தில் கர்த்தருக்கு வெளிப்படுத்துகிறார்கள், (உபா.32:35· ரோம. 12:19).

» பாவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் போல சங்கீதக்காரர்கள் பாவங்களால் பாதிக்கப்பட்டு வெறுக்கப்பட்டவர்களைப் போல தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துகிறார்கள், ( 10:8-10).

» சங்கீதக்காரர்கள் தங்கள் எதிரிகளுக்கு எதிராக ஜெபம் செய்யும் அதேநேரத்தில் தங்களுக்காகவும் ஜெபம் செய்கின்றார்கள். (9:20, 35).

» புதிய ஏற்பாட்டு எழுத்தளர்கள் கூட தங்களுடைய சிறந்த கிருபையைப்பற்றிய அறிவுள்ளவர்களாக இருந்தும், சில நேரங்களில், சகல சூழ்நிலைகளில் ஜனங்களைச் சபித்துள்ளார்கள். (கலா. 1:8-9 2 ீநவ. 2:12).

**சங்கீதங்கள்**:

தலைப்புக்கள்

## துதிப்பாடல்கள்.

| | |
|---|---|
| 1. | **சங்கீதம்** 8— கர்த்தருடைய மகிமை பூமியின்மோல் எங்கும் உள்ளது. |
| 2. | **சங்கீதம்** 14இ 53—கர்த்தர் இல்லாதவர்களை வெட்கப்படுத்தும் வண்ணமாக, தன்னுடையவர்களைக் கர்த்தர் காத்துக் கொள்கிறார். |

| | |
|---|---|
| 3. | **சங்கீதம்** 15—கர்த்தருடையவர்கள் மட்டும் கர்த்தருடன் வாழுவார்கள். |
| 4. | **சங்கீதம்** 19—கர்த்தர் தன்னுடைய உலகத்தில் தன்னுடைய பிள்ளைகளுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறார். |
| 5. | **சங்கீதம்** 24—கர்த்தர் மகிமையின் ராஜாவாக இருக்கிறார். |
| 6. | **சங்கீதம்** 29—கர்த்தருடைய சத்தம் வல்லமையும் மகிமையுள்ளதுமாயிருக்கின்றது. |
| 7. | **சங்கீதம்** 33—கர்த்தர் படைப்பின் வல்லமையுள்ள தேவன். |
| 8. | **சங்கீதம்** 46—கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு உயர்ந்த அடைக்கலமானவர் |
| 9. | **சங்கீதம்** 47—கர்த்தர் உலகம் முழுவதற்கும் மகத்துவமான ராஜா |
| 10. | **சங்கீதம்** 48—கர்த்தர் சீயோனின் மகா ராஜா |
| 11. | **சங்கீதம்** 50—கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளின் நீதியுள்ள நியாயாதிபதி. |
| 12. | **சங்கீதம்** 65—கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளின் இரட்சகராக இருக்கிறார். |
| 13. | **சங்கீதம்** 67—எல்லா மக்களும் கர்த்தரைத் துதிப்பார்களாக |
| 14. | **சங்கீதம்** 68—கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளுக்கு வல்லமையும் பெலனுமாக இருக்கிறார். |
| 15. | **சங்கீதம்** 75—கத்தரின் நீதியான நியாயத்தீர்ப்புக்காக அவரைத் துதித்துப் பாடுங்கள். |
| 16. | **சங்கீதம்** 76—கர்த்தர் நியாயந்தீர்க்கும் போது மாட்சிமையுடையவராக இருக்கின்றார். |
| 17. | **சங்கீதம்** 78—கர்த்தருடைய பிள்ளைகள் தவறான வழியில் திரியும் போதும் அவர்களை வழிநடத்துகிறார். |
| 18. | **சங்கீதம்** 81—கர்த்தருடைய பிள்ளைகள் தனக்குக் கீழ்ப்படவதையும், தன்னைத் துதிப்பதையும் விரும்புகிறார். |
| 19. | **சங்கீதம்** 82—கர்த்தர் எல்லாத் தேசத்தாரையும் சுதந்தரிப்பார். |
| 20. | **சங்கீதம்** 84—கர்த்தருடைய வீட்டில் இருப்பவர்கள் பாக்கியவான்கள். |
| 21. | **சங்கீதம்** 85—கர்த்தருக்குப் பயப்படுபவர்களுக்கு அவரின் இரட்சிப்பு சமீபமாய் இருக்கின்றது. |

| | |
|---|---|
| 22. | **சங்கீதம்** 87—கர்த்தருடைய நகரம் மகிமையுள்ளதாயிருக்கின்றது. |
| 23. | **சங்கீதம்** 93—கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறார் மகத்துவத்தை அணிந்துகொண்டிருக்கிறார் |
| 24. | **சங்கீதம்** 95— கர்த்தரே மகா தேவனும் எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார். |
| 25. | **சங்கீதம்** 96—கர்த்தர் பெரியவரும் மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார் |
| 26. | **சங்கீதம்** 97—கர்த்தாவே பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர் எல்லா தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர். |
| 27. | **சங்கீதம்** 98—கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார். |
| 28. | **சங்கீதம்** 99—எங்கள் கர்த்தர் பரிசுத்தமானவர். |
| 29. | **சங்கீதம்** 100—நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தரைக் கெம்பீரமாய்ப்பாடுங்கள். |
| 30. | **சங்கீதம்** 101—சுத்த இருதயத்துடன் கர்த்தருக்கு முன்பாக நடவுங்கள். |
| 31. | **சங்கீதம்** 103—கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவரைத் துதியுங்கள் |
| 32. | **சங்கீதம்** 104—கர்த்தர் தன்னுடைய படைப்புக்களாகிய உயிரனங்கள் யாவற்றிற்கும் தேவையான சகலவற்றையும் கொடுக்கிறார். |
| 33. | **சங்கீதம்** 105—கர்த்தர் தன்னுடைய மக்கள் யாவருக்கும் உண்மையுள்ளவராக இருக்கின்றார். |
| 34. | **சங்கீதம்** 106—தன்னுடைய மக்களைக் கர்த்தர் மீண்டும் மீண்டும் இரட்சிக்கிறார். |
| 35. | **சங்கீதம்** 111—கர்த்தர் தன்னுடைய உடன்படிக்கைக்கு எப்போதும் உண்மையுள்ளவராக இருக்கின்றார். |
| 36. | **சங்கீதம்** 113—கர்த்தருடைய நாமத்தை துதியுங்கள். |
| 37. | **சங்கீதம்** 114—கர்த்தர் தன்னுடைய அற்புதவல்லமையால் எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலர்களை வெளியில் கொண்டுவந்தார் |
| 38. | **சங்கீதம்** 115—விக்கிரகங்கள் ஒன்றுமில்லை கர்த்தரே சகலதுமாயிருக்கிறார். |
| 39. | **சங்கீதம்** 117—எல்லா ஜனங்களும் கர்த்தரைத் துதிப்பார்களாக. |

| | |
|---|---|
| 40. | **சங்கீதம்** 118—கர்த்தருடைய அற்புத இரட்சிப்பிற்காக கர்த்தரைத் துதிப்போமாக. |
| 41. | **சங்கீதம்** 119—கர்த்தருடைய அற்புத வார்த்தைக்காக அவரைத் துதிப்போமாக. |
| 42. | **சங்கீதம்** 121—எங்களுடைய உதவிகள் யாவும் கர்த்தரிடமிருந்தே வருகின்றன |
| 43. | **சங்கீதம்** 122—கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். |
| 44. | **சங்கீதம்** 123—இரக்கத்திற்காகக் கர்த்தரைத் தேடுங்கள். |
| 45. | **சங்கீதம்** 124—கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளின் பக்கமாக நிற்கிறார். |
| 46. | **சங்கீதம்** 125—கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளைச் சூழ்ந்து பாதுகாப்பைக் கட்டளையிடுகின்றார். |
| 47. | **சங்கீதம்** 126—கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளை சிறையிருப்பிலிருந்து மீட்டுக் கொள்ளுகிறார். |
| 48. | **சங்கீதம்** 129—கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளின் எதிரிகளை வெற்றி கொள்ளுகிறார். |
| 49. | **சங்கீதம்** 134—கர்த்தருடைய ஊழியக்காரரே கர்த்தரைத் துதியுங்கள். |
| 50. | **சங்கீதம்** 135—கர்த்தர் விரும்புகிறதைச் செய்கிறார். |
| 51. | **சங்கீதம்** 136—கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளது. |
| 52. | **சங்கீதம்** 145—கர்த்தருடைய நாமத்தை என்றென்றும் துதியுங்கள். |
| 53. | **சங்கீதம்** 147—தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். |
| 54. | **சங்கீதம்** 148—வானத்திலும் பூமியிலுமிருந்து கர்த்தரைத் துதியுங்கள். |
| 55. | **சங்கீதம்** 149—கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தருக்குத் துதியைப் பாடுவார்களாக. |
| 56. | **சங்கீதம்** 150—சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. |

## தனிப்பட்டதும் சமுதாயம் சார்ந்ததுமான புலம்பல்

| | |
|---|---|
| 1. | **சங்கீதம்** 3—கர்த்தாவே எழுந்தருளும் என் தேவனே என்னை இரட்சியும். |
| 2. | **சங்கீதம்** 4—என் நீதியின் தேவனே நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும் |
| 3. | **சங்கீதம்** 5—கர்த்தாவே என் வார்த்தைகளுக்குச் செவிகொடும் என் தியானத்தைக் கவனியும். |
| 4. | **சங்கீதம்** 6—என்னைக் குணமாக்கும் கர்த்தாவே |
| 5. | **சங்கீதம்** 7—என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும். |
| 6. | **சங்கீதம்** 9—எழுந்தருளும் கர்த்தாவே மனுஷன் பெலன்கொள்ளாதபடி செய்யும் |
| 7. | **சங்கீதம்** 10—கர்த்தாவே ஏன் தூரத்தில் நிற்கிறீர்? |
| 8. | **சங்கீதம்** 11—கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார் |
| 9. | **சங்கீதம்** 12—இச்சகம்பேசுகிற எல்லா உதடுகளையும் பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப்போடுவார். |
| 10. | **சங்கீதம்** 13—எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்? |
| 11. | **சங்கீதம்** 17—கர்த்தாவே கெட்டவர்களின் கைக்கு என்னை விலக்கிக் காத்துக் கொள்ளும். |
| 12. | **சங்கீதம்** 22—என் தேவனேஇ என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? |
| 13. | **சங்கீதம்** 25—கர்த்தாவே, என் பகைஞர் என்னை மேற்கொள்ளவிடாதேயும். |
| 14. | **சங்கீதம்** 26—கர்த்தாவே என்னை குற்றமறக் கழுவி சுத்திகரியும். |
| 15. | **சங்கீதம்** 27—என் இரட்சிப்பின் தேவனே என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும். |
| 16. | **சங்கீதம்** 28—என் கன்மலையாகிய கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் நீர் கேளாதவர் போல மவுனமாயிராதேயும் |
| 17. | **சங்கீதம்** 31—கர்த்தாவே என்னை ஒரு போதும் வெட்கப்படவிடாதேயும். |
| 18. | **சங்கீதம்** 35—கர்த்தாவே நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி என்னோடு யுத்தம்பண்ணுகிறவர்களோடே யுத்தம் பண்ணும். |
| 19. | **சங்கீதம்** 36—அதோ அக்கிரமக்காரர் விழுந்தார்கள் எழுந்திருக்கமாட்டாமல் தள்ளுண்டு போனார்கள். |

| | |
|---|---|
| 20. | **சங்கீதம்** 38—கர்த்தாவே உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும் உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும். |
| 21. | **சங்கீதம்** 39—கர்த்தாவே என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும் |
| 22. | **சங்கீதம்** 41—கர்த்தாவே என்மேல் இரக்கமாயிரும், என்னை உயர்த்தியருளும். |
| 23. | **சங்கீதம்** 42—ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? |
| 24. | **சங்கீதம்** 43—தேவனே நீர் என் நியாயத்தை விசாரித்து பக்தியில்லாத ஜாதியாரோடு எனக்காக வழக்காடி சூதும் அநியாயமுமான மனுஷனுக்கு என்னைத் தப்புவியும். |
| 25. | **சங்கீதம்** 44—.கர்த்தாவே உமது இரக்கத்தின் நிமித்தம் எங்களை இரட்சியும். |
| 26. | **சங்கீதம்** 51—கர்த்தாவே , உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். |
| 27. | **சங்கீதம்** 52—பலவானே பொல்லாப்பில் ஏன் பெருமைபாராட்டுகிறாய்? தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது. |
| 28. | **சங்கீதம்** 54—கர்த்தாவே, உமது நாமத்தின் நிமித்தம் என்னை இரட்சியும் |
| 29. | **சங்கீதம்** 55—தேவனே என் ஜெபத்தைக் கேட்டருளும் என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும். |
| 30. | **சங்கீதம்** 56—அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ? தேவனே கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும். |
| 31. | **சங்கீதம்** 57—எனக்கு இரங்கும் தேவனே எனக்கு இரங்கும் |
| 32. | **சங்கீதம்** 58—சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம் அவர்களில் இருக்கிறது. |
| 33. | **சங்கீதம்** 59—என் தேவனே என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும் |
| 34. | **சங்கீதம்** 60—தேவனே நீர் எங்களைக் கைவிட்டீர் எங்களைச் சிதறடித்தீர் எங்கள் மேல் கோபமாயிருந்தீர் மறுபடியும் எங்களிடமாய்த் திரும்பியருளும். |
| 35. | **சங்கீதம்** 62—தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது அவரால் என் இரட்சிப்பு வரும். |
| 36. | **சங்கீதம்** 64— தேவனே என் விண்ணப்பத்தில் என் சத்தத்தைக் கேட்டருளும் |

| |
|---|
| 37. **சங்கீதம்** 69—தேவனே என்னை இரட்சியும் வெள்ளங்கள் என் ஆத்துமாமட்டும் பெருகிவருகிறது. |
| 38. **சங்கீதம்** 70—தேவனே என்னை விடுவியும் கர்த்தாவே எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும். |
| 39. **சங்கீதம்** 71—கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன் நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும். |
| 40. **சங்கீதம்** 74—தேவனே நீர் எங்களை என்றென்றைக்கும் ஏன் தள்ளிவிடுகிறீர்? |
| 41. **சங்கீதம்** 77—தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? |
| 42. **சங்கீதம்** 79—தேவனே புறஜாதியார் உமது சுதந்தரத்தில் வந்து உமது பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுப்படுத்தி எருசலேமை மண்மேடுகளாக்கினார்கள். |
| 43. **சங்கீதம்** 80—சேனைகளின் தேவனே எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும் அப்பொழுது இரட்சிக்கப்படுவோம். |
| 44. **சங்கீதம்** 83— கர்த்தாவே அவர்கள் உமது நாமத்தைத் தேடும்படிக்கு அவர்கள் முகங்களை அவமானத்தாலே மூடும். |
| 45. **சங்கீதம்** 86—கர்த்தாவே உமது செவியைச் சாய்த்து என் விண்ணப்பத்தைக் கேட்டருளும் நான் சிறுமையும் எளிமையுமானவன். |
| 46. **சங்கீதம்** 88—என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். |
| 47. **சங்கீதம்** 90—நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து உமது உக்கிரத்தினால் கலங்கிப் போகிறோம். |
| 48. **சங்கீதம்** 94—கர்த்தாவே துன்மார்க்கர் எதுவரைக்கும் மகிழ்ந்து துன்மார்க்கர் எதுவரைக்கும் களிகூர்ந்திருப்பார்கள்? |
| 49. **சங்கீதம்** 102—கர்த்தாவே என் விண்ணப்பத்தைக் கேளும் என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக. |
| 50. **சங்கீதம்** 108—எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீரல்லவா? |
| 51. **சங்கீதம்** 109—நான் துதிக்கும் தேவனே மவுனமாயிராதேயும். |
| 52. **சங்கீதம்** 120—என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன் அவர் எனக்குச் செவிகொடுத்தார். |
| 53. **சங்கீதம்** 130—கர்த்தாவே ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன் |
| 54. **சங்கீதம்** 137—பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து அங்கே சீயோனை நினைத்து அழுதோம். |

| | |
|---|---|
| 55. | **சங்கீதம்** 140—கர்த்தாவே பொல்லாத மனுஷனுக்கு என்னைத் தப்புவியும் கொடுமையுள்ளவனுக்கு என்னை விலக்கி இரட்சியும். |
| 56. | **சங்கீதம்** 141—கர்த்தாவே என் வாய்க்குக் காவல் வையும் என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும். |
| 57. | **சங்கீதம்** 142—கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன். |
| 58. | **சங்கீதம்** 143—கர்த்தாவே உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும் |

## தனிப்பட்டவரின் நன்றிப்பாடல்கள்.

| | |
|---|---|
| 1. | **சங்கீதம்** 23—கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார். |
| 2. | **சங்கீதம்** 30—என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவொட்டாமல் நீர் என்னைக் கைதூக்கி எடுத்தபடியினால் நான் உம்மைப் போற்றுவேன். |
| 3. | **சங்கீதம்** 32—எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான். |
| 4. | **சங்கீதம்** 34—கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். |
| 5. | **சங்கீதம்** 40—நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார். |
| 6. | **சங்கீதம் சங்கீதம்** 66—ஜனங்களே நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து அவரைத் துதிக்குஞ் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள். |
| 7. | **சங்கீதம்** 92—கர்த்தரைத் துதிப்பதும் உன்னதமானவரே உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவதும் நலமாயிருக்கும். |
| 8. | **சங்கீதம்** 107—கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள் அப்படிச் சொல்லக்கடவர்கள். |
| 9. | **சங்கீதம்** 116— கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால் அவரில் அன்புகூருகிறேன். |
| 10. | **சங்கீதம்** 138— உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன் |

| | |
|---|---|
| 11. | **சங்கீதம்** 139—கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். |
| 12. | **சங்கீதம்** 146—நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன். |

## அரசருக்குரிய சங்கீதங்கள்.

| | |
|---|---|
| 1. | **சங்கீதம்** 2—நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் |
| 2. | **சங்கீதம்** 18—கர்த்தர், தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு மகத்தான இரட்சிப்பை அளிக்கிறார். |
| 3. | **சங்கீதம்** 20—கர்த்தர் தாம் அபிஷேகம் பண்ணினவரை இரட்சிக்கிறார் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன் |
| 4. | **சங்கீதம்** 21—கர்த்தாவே உம்முடைய வல்லமையிலே ராஜா மகிழ்ச்சியாயிருக்கிறார் உம்முடைய இரட்சிப்பிலே எவ்வளவாய்க் களிகூருகிறார்! |
| 5. | **சங்கீதம்** 45—தேவனே உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. |
| 6. | **சங்கீதம்** 61—ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர் |
| 7. | **சங்கீதம்** 63—ராஜாவோ தேவனில் களிகூருவார் |
| 8. | **சங்கீதம்** 72—தேவனே ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும்இ ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத்தருளும். |
| 9. | **சங்கீதம்** 89—இஸ்ரவேலின் பரிசுத்தரால் எங்களுக்கு ராஜாவும் உண்டு. |
| 10. | **சங்கீதம்** 110—நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் சொன்னார். |
| 11. | **சங்கீதம்** 132—கர்த்தாவே தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும். |
| 12. | **சங்கீதம்** 144—என் கைகளைப் போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். |

## நம்பிக்கைக்கும் ஞானத்திற்குமான சங்கீதங்கள்.

| | |
|---|---|
| 1. | **சங்கீதம்** 1—கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்துஇ இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். |
| 2. | **சங்கீதம்** 16—எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன் |
| 3. | **சங்கீதம்** 37—கர்த்தரை நம்பி நன்மைசெய் |
| 4. | **சங்கீதம்** 49—என் வாய் ஞானத்தைப் பேசும் என் இருதயம் உணர்வைத் தியானிக்கும். |
| 5. | **சங்கீதம்** 73—கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். |
| 6. | **சங்கீதம்** 91—நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம் என் கோட்டை என் தேவன் நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். |
| 7. | **சங்கீதம்** 112—கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். |
| 8. | **சங்கீதம்** 127—பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். |
| 9. | **சங்கீதம்** 128—கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான். |
| 10. | **சங்கீதம்** 131—இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக. |
| 11. | **சங்கீதம்** 133—சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? |

**சங்கீத்தப் புத்தகத்தைக் கற்றுக் கொள்வதற்கு மூன்று வழிகள் உண்டு.**

(1) **புத்தக வாரியாக**

(2) **எழுத்தளரின் பிரிவாக**

(3) **விடயப்பிரிவாக**

1) **புத்தக வாரியாக** 1-41 (ஆதியாகமத்துடன் தொடர்புடையது.)

***திறவு கோல் வார்த்தை மனிதன்.***

- துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் கர்த்தருடைய வேதத்தில்

பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (1:1-2).

- மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். (8:4).
- கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார். (25:12).
- கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (34:8).
- நன்மையைக் காணும்படி ஜீவனை விரும்பி நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்? (34:12).
- நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும் அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். (37:23).
- நீ உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம். (37:37).
- அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்காமல் கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான். (40:4).

## 42-72 (**யாத்திரகாமத்துடன் தொடர்புடையது**)
## திறவு கோல் வார்த்தை " விடுதலை"

- "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்". (50:15).
- அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி என்னை விடுவித்தார் என் கண் என் சத்துருக்களில் நீதி சரிக்கட்டுதலைக் கண்டது. (54:7).
- நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ? (56:13).
- என் தேவனே என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும் என்மேல் எழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும். (59:1).
- நான் அமிழ்ந்திப்போகாதபடிக்குச் சேற்றினின்று என்னைத் தூக்கிவிடும் என்னைப் பகைக்கிறவர்களினின்றும் நிலையாத ஜலத்தினின்றும் நான் நீங்கும்படி செய்யும். (69:14).
- உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து என்னைக் காத்தருளும் உமது செவியை எனக்குச் சாய்த்து என்னை இரட்சியும். (71:2).
- கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். (72:12).

**73-89 (லேவியராகமத்தின் தொடர்புடையது.)**

**திறவு கோல் வார்த்தை: புகலிடம்**

- நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும் அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது. (73:17).
- உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி உமது நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரைமட்டும் இடித்து அசுத்தப்படுத்தினார்கள். (74:7).
- தேவனேஇ உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது நம்முடைய தேவனைப்போலப் பெரிய தேவன் யார்? (77:13).
- தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மலைகளைப்போலவும் என்றைக்கும் நிற்கும்படி தாம் அஸ்திபாரப்படுத்தின பூமியைப்போலவும் கட்டினார். (78:69).

**90-106 (எண்ணாகமத்துடன் தொடர்புடையது.)**

**திறவு கோல் வார்த்தை:ஒய்வீன்மை, அலைச்சல்.**

(**அதிகாரம் 90 --- 106.)**

**107-150 (உபாகமப் புத்தகம் தொடர்பாக.)**

**திறவு கோல் வார்த்தை:** கர்த்தருடைய வார்த்தை (அதிகாரம்119.)

**எழுத்தளரின் பிரிவாக**

| |
|---|
| 1. **தாவீது** |
| **அ. மேய்பனின் சங்கீதங்கள்.**: 8. 19. 23. 29. 144 |
| **ஆ. பாவிகளின் சங்கீதங்கள்**: 32. 51. 38 |
| **இ. உபத்திரபத்தின் சங்கீதங்கள்**: 3. 4. 5. 6. 7. 11. 12. 13. 14. 17. 22. 25. 26. 27. 28. 31. 34. 35. 39. 40. 41. 53. 54. 55. 56. 57. 58. 59. 61. 62. 63. 64. 69. 70. 86. 109. 140. 141. 142. 143 |
| **ஈ. மனநிறைவுதரும் சங்கீதங்கள்.**: 2. 9. 15. 16. 18. 20. 21. 24. 30. 36. 37. 52. 60. 65. 68. 72. 95. 101. 103. 105. 108. 110. 122. 124. 131. 133. 138. 139. 145 |
| 2. **கோரா**: 42. 44. 45. 46. 47. 48. 49. 84. 85. 87 |
| 3. **ஆசாப்**: 50. 73. 74. 75. 76. 77. 78. 79. 80. 81. 82. 83 |
| 4. **கேமன்**: 88 |

| |
|---|
| 5. **ஈதான்**: 89 |
| 6. **சாலொமோன்**: 127 |
| 7. **மோசே**: 90 |
| 8. **எசேக்கியா**: 120. 121. 123. 125. 126. 128. 129. 130. 132. 134 |
| 9. எழுதியவர் **தெரியாது.**: 1. 10. 33. 43. 66. 67. 71. 91. 92. 93. 94. 96. 97. 98. 99. 100. 102. 104. 106. 107. 111. 112. 113. 114. 115. 116. 117. 118. 119. 135. 136. 137. 146. 147. 148. 149 150 |

விடயம் சம்பந்தமாக வகைப்படுத்தல்.

| |
|---|
| **1.பக்தியூட்டும் சங்கீதங்கள்.**: 4. 9. 12. 13. 14. 16. 17. 18. 19. 22. 23. 24. 27. 30. 31. 33. 34. 35. 37. 40. 42 . 43. 46. 50. 55. 56. 61. 62. 63. 66. 68. 69. 71. 73. 75. 76. 77. 80. 81. 84. 85. 88. 90. 91. 94. 95. 1 00. 103. 106. 107. 111. 115. 116. 118. 119. 122. 123. 126. 133. 136. 138. 139. 141. 142. 144. 147. 148 . 149. 150 |
| 2. **தவறுக்கு வருத்தம் தெரிவிக்கும் சங்கீதங்கள்.**: 6. 32. 38. 51. 102 |
| 3. **சாபமிடும் சங்கீதங்கள்.**: 35. 55. 58. 59. 69. 83. 109. 137. 140 |
| 4. **உயர்விற்கான சங்கீதங்கள்.**: 120 முதல் 134 வரை |
| 5. **அல்லேலுயா சங்கீதங்கள்.**: 113 முதல் 118 வரை |
| 6. **சரித்திர சங்கீதங்கள்**: 78. 105. 106 |
| 7. **முதல் எழுத்துச் சங்கீதங்கள்.**: 9. 10. 25. 34. 37. 111. 112. 119. 145 |
| 8. மேசியாபற்றிய **சங்கீதங்கள்.**: 2. 8. 16. 22. 23. 24. 31. 34. 40. 41. 45. 55. 68. 69. 72. 89. 102. 109. 110. 118. 129 |

விடயம் சம்பந்தமான முறைப்படி சங்கீதப் புத்தகத்தை இப்போது கற்றுக் கொள்ளுவோம்.

## *பக்தியூட்டும் சங்கீதங்கள்.*

| |
|---|
| 4. 9. 12. 13. 14. 16. 17. 18. 19. 22. 23. 24. 27. 30. 31. 33. 34. 35. 37. 40. 42. 43. 46. 50. 55. 56. 61. 62. 63. 66. 68. 69. 71. 73. 75. 76. 77. 80. 81. 84. 85. 88. 90. 91. 94. 95. 100. 103. 106. 107. 111. 115. 116. 118. 119. 122. 123. 126. 133 136. 138. 139. 141. 142. 144. 147. 148. 149. 150 |

இந்த 70 சங்கீதங்களும் பக்தியூட்டும் சங்கீதங்கள் என பெயரிடப்பட்டுள்ளன. ஏனெனில் இவை அனேக முக்கியமான விஷேசித்த வாக்குறுதிகளைக் கொண்டுள்ளன. இதனால் இவை விசுவாசிகளை உற்சாகப்படுத்துகின்றன. இவற்றைபடிக்கும்போது, இவை வாக்குறுதிகளை தானாகவே அள்ளித் தருகின்றன.

வேறு நேரங்களில், இன்னும் சில வார்த்தைகளைச் சேர்த்து உற்சாகப்படுத்துகின்றன. இந்தச் சங்கீதங்கள் அழவும் பாடவும் செய்கின்றன. சந்தோசம், சத்தம் இடுதல், வெறுப்பான நேரம் போன்ற நேரங்களில் எழுதியுள்ளார்கள். அவர்கள் கடந்தகாலத்தைப் பார்த்து, எதிர்காலத்தை உணர்ந்து எழுதியுள்ளார்கள். இங்கு மனிதனுடைய ஆத்துமா வெறுமையை உணர்கின்றது.

1. **சங்கீதம்** 4
   **தெரிவு செய்த வசனங்கள்.**

| |
|---|
| பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார். (4:3). |
| சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன் கர்த்தாவே நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர். (4:8). |

**விளக்கம்:** தாவீதின் ஜெபம் அமைதியையும் நித்திரையையும் அவருக்குக் கொடுத்து.. கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கும் அருமையான உணர்வு வாழ்க்கையில் அமைதியாகும். சங்கீதம் 29: 11 கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார் கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார். அத்துடன் சங்கீதம் 119: 165 இவ்வாறு கூறுகின்றது. “உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு அவர்களுக்கு இடறலில்லை.”

2. **சங்கீதம் 9**

## தெரிவு செய்த வசனங்கள்.:

| |
|---|
| "துன்மார்க்கரும்இ தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள். " (9:17). |

**விளக்கம்**: சில நாள்களில் இது மிகவும் பயங்கரமான நிகழ்வாக அமையும்.

- சங்கீதம் 11: 6ஜப் பார்ப்போம். துன்மார்க்கர் மேல் கண்ணிகளை வருஷிக்கப் பண்ணுவார் அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு.

- மத்தேயு 25:31–46. அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து. வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள் தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள் அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள் வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள் வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள் காவலிலிருந்தேன் என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். அப்பொழுதுஇ நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக்

கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக்கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக் கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன் என்பார். அப்பொழுது இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன் நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை வஸ்திரமில்லாதிருந்தேன் நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன் நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார். அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே உம்மைப் பசியுள்ளவராகவும் தாகமுள்ளவராகவும்இ அந்நியராகவும் வஸ்திரமில்லாதவராகவும் வியாதிப்பட்டவராகவும் காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.

- வெளிப். 14: 10. அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும்இ ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.
- வெளி: 19:20 அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத்தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம் போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான் இருவரும்

கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்.

- வெளிப். 20:11-15 பின்பு நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன் அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன் அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.
- வெளிப் 21:8 பயப்படுகிறவர்களும் அவிசுவாசிகளும் அருவருப்பானவர்களும் கொலை பாதகரும் விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.

## 3. சங்கீதம் 13

### தெரிவு செய்த வசனங்கள்.:

| |
|---|
| கர்த்தாவே எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர் எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்? (13: 1). |
| என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்? (13: 2). |

**விளக்கம்::** வேதாகமத்தில் கூறப்படும் கதாநாயகர்கள் துன்பப்படுவதில்லை என்ற தப்பான கருத்து நிலவுகின்றது, அவர்கள் ஒருகாலமும் தோல்விகளை அனுபவிக்கவில்லை என்றும்,

அவர்கள் ஒரு போதும் நம்பிக்கை இழக்கவில்லை என்றும், அவர்கள் எல்லா நேரங்களிலும் வெற்றியையே அனுபவித்தார்கள் என்றும், அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்றும், அதிக சந்தோஷமானவர்கள் என்றும் நம்பப்படுகின்றது. உண்மையில் சத்தியத்திலிருந்து எதையும் அகற்றமுடியாது. உண்மையில் வேதாகம மனிதர்களும் நம்மைப் போன்ற மனிதர்களேயாகும். (யாக்5:17). இவர்களும் தோல்விகளினால் கசப்பான துன்பங்களை அனுபவித்தவர்களாகும். இன்று இருக்கும் ஆதாமின் பிள்ளைகளைப் போல அவர்களும் அந்த நேரத்தில் தோல்விகளையும் ஏமாற்றங்களையும் அனுபவித்தவர்களாவார்கள். அவர்களின் ஜெபங்களில் காணப்படும் மனத் தளர்ச்சிகளே அதற்கு சாட்சிகளாக உள்ளன. சங்கீதம் 13ம் ஆத்துமாவின் துக்கத்தை வெளிப்படுத்துவதை எம்மால் காணமுடிகின்றது.

**அடுத்து அவை குறித்த குறிப்பிடத்தக்க உதாரணம் கீழே கொடுக்கப்படுகின்றது**.

1. தாவீதின் ஜெபம் சங்கீதம் 6:1-7 31:1-19
2. ஆசாப்பின் ஜெபம் சங்கீதம் 77:1-20
3. கேமானுடைய ஜெபம் சங்கீதம் 88:1-18
4. பெயரில்லாத எழுத்தாளர்களின் ஜெபம் சங்கீதம் 102:1-11
5. பாபிலோனில் யூத சிறையிருப்பின் ஜெபம் சங்கீதம் 137:1-6
6. மோசேயின் ஜெபம் எண்ணாகம் 11:1, 12, 4, 15
7. யோசுவாவின் ஜெபம் யோசுவா 7:6-9
8. எலியாவின் ஜெபம் 1 ராஜா 19:4, 10, 14
9. யோபுவின் ஜெபம் யோபு 3:3-12 10:18-22
10. எரேமியாவின் ஜெபங்கள் எரேமியா 4:10 20:7-9, 14-18
11. யோனாவின் ஜெபம் யோனா 4:1-3
12. ஆபகூக்கின் ஜெபம் ஆபகூக் 1:2-4
13. கோராவின் ஜெபம் சங்கீதம் 42:3-11 44:8-26

## 4. சங்கீதம் 14

## தெரிவு செய்த வசனங்கள்

| |
|---|
| தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்துஇ அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள் நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை. (14:1). |

**விளக்கம்**: தாவீது இங்கே கடவுள் இல்லாத மதி கெட்டவனைப்பற்றி கூறுகின்றார். வேதாக மத்தின் விளக்கத்தின்படி மதிகெட்டவன் என்றால் இருதயத்தில் குழப்பம் உள்ளவன் என்று பொருள்படும், ஆனால் தலையில் குழப்பம் அற்றவனாகும். **வேதாகமத்தில் உள்ள மற்ற மதிகெட்டவர்கள் குறித்துப் பார்ப்போம்.**

1. **பாவத்தைப் பரியாசம் செய்யும் மதிகெட்டவன்**. (நீதி.14:9).
2. **ஞானத்தை வெறுக்கும் மதிகெட்டவன்**. (நிதி.15:5).
3. **சச்சரவுகளை உண்டாக்கும் மதி கெட்டவன்**. (நீதி.20:3).
4. **மகிமையைத் தேடும் புத்தியீனன்**. (1 சாமு.26:21).
5. **பணத்தை நேசிக்கும் புத்தியீனன்**. (லூக்.12:20).
6. **கிறிஸ்த்துவை கனம்செய்யும் மூடன்**. (1கொரி. 4:10)

**5. சங்கீதம் 17**

**தெரிவு செய்த வசனம்** :

| |
|---|
| கண்மணியைப்போல என்னைக் காத்தருளும். (17:8). |

**விளக்கம்**: தாவீது உணர்சிவசமான சொற்களைப் பாவித்து கர்த்தருடைய அன்பை விசுவாசிகளுக்கு தெரியப்படுத்துகின்றார்.

1. கண்மணி. (உபா.32:10 சகரி. 2:8.)

**2. செட்டையின் /மேல்/ நிழலில். (உபா. 32:11, 12 சங். 36:7; 57:1; 91:1, 4; மத். 23:37.)**

**6. சங்கீதம் 18**

**தெரிவு செய்த வசனங்கள்** :

| | |
|---|---|
| 1. | உயரத்திலிருந்து அவர் கை நீட்டி என்னைப் பிடித்து ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார். (18:16). |
| 2. | என் ஆபத்துநாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள் கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். (18:19). |
| 3. | தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர் என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார். (18:28). |
| 4. | உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர் உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும். (18:35). |

**விளக்கம்** : இங்கு 16ம் வசனத்தில் ஜலப்பிரவாகத்திலிருந்து தூக்கிவிட்டார் என்று கூறுகின்றார், இதன் அர்த்தம் பிரச்சனைகளிலிருந்தும், மன வேதனைகளிலிருந்தும் தூக்கிவிட்டார் என்பதாகும். (சங். 69:1இ 2 144:7 ஏசா. 43:2.) இந்த உண்மையான உணர்விலேதான் , பார்வோனின் மகள், நைல் நதியிலிருந்து ஒரு குழந்தையைக் கொண்டுவந்தபோது, அதனுடைய பெயரை மோசே என்று கூறினாள், ஏனென்றால் அதை நான் தண்ணீரில் இருந்து எடுத்தேன் என்பதாலாகும் (யாத்.2:10). தாவீது இங்கு தன்னைக் கர்த்தர் ஜலப்பிர வாகத்திலிருந்து மீட்டதாகக் கூறுகின்றார், பல காலங்களுக்குப் பின்பு அப்போஸ்தலன் யோவான் "சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்" என்று எழுதுகிறார்.

7. **சங்கீதம்** 23

**தெரிவு செய்த வசனம்** :

| |
|---|
| (முழுச் சங்கீதமும்.) "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன்." |

**விளக்கம்**: இது, சந்தேகமின்றி எல்லா நேரங்களிலும் சொல்லப்படும் ஒரு ஜெபமாகும். மத்தேயு 6:9-13. இல் கூறப்பட்டுள்ள கர்த்தரின் ஜெபத்தைப் போன்றதாகும். அவர் இவ்வாறு கூறுகின்றார். " நான் தழ்ச்சி அடையேன்"

1. அவருடைய ஆத்துமாவுக்கு ஆவிக்குரிய போசனை தேவைப்படும் போது மேய்ப்பனானவர் பச்சைப் புல்வழியைக் காண்பிக்கின்றார்.

2. அவருடைய ஆத்துமா விடாய்த்துப் போயிருக்கும் போது அமர்ந்த தண்ணீரைக் காண்பிக்கின்றார்.

3. அவருடைய ஆத்துமாவுக்கு உயிர்மீட்சி தேவைப்படும் போது, மேய்ப்பன் அதை இளைப்பாறப்பண்ணுகிறார்.

4. ஆத்துமாவுக்கு வழிநடத்தல் தேவைப்படும் போது, மேய்ப்பன் சரியான பாதையில் வழிநடத்துகிறார்.

5. ஆத்துமா மரணத்தைச் சந்திக்கும் நேரங்களில், மேய்ப்பன் அவனோடு கூடச் செல்லுகிறார்.

6. ஆத்துமா எதிரிகளைச் சந்திக்கும் வேளைகளில், மேய்ப்பன் வெற்றி கொள்வதற்கு உதவுகிறார்.

7. ஆத்துமா காயப்பட்டபோது, மேய்ப்பன் அவனது தலையை எண்ணெய்யினால் அபிஷேகம் செய்கின்றார்.

8. ஆத்துமாவுக்கு தோழமை தேவைப்படும் போது, மேய்ப்பன் நன்மையையும், கிருபையையும் அவனுடன் செல்வதற்கு நியமிக்கின்றான்.

9. தற்காலிகமான இந்த உலகத்தை தாவீது விட்டு நீங்கும்போது, மேய்பன் நிரந்தரமான பரலோக இருப்பிடத்தைக் கொடுக்கிறான்.

தாவீதின் சாட்சி, “நான் தாழ்ச்சியடையேன் ” பாபிலோனியன் விருந்து நடந்த சுவரில் பெல்ஷக்தாருக்காக எழுதப்பட்ட செய்தியானது வித்தியாசமாக இருந்தது.

இந்தச் செய்தியானது தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு அதற்கு முடிவுண்டாக்கினார் (தானி. 5:26). “நீ தராசிலே நிறுக்கப்பட்டு குறையக் காணப்பட்டாய்.” (தானி. 5:27).

10. இந்த இடத்தில், சங்கீதம் மூன்றுவிதமாக செயற்பாட்டைக் கொண்டுள்ளது, உப்பிட்டுப் பார்க்கும் போது சங்கீதம் 22, 23, 24.

குறிப்பு :சங்கீதம் 22 ( யோவான்.10:11)

(1) நல்ல மேய்ப்பன்

(2) இரட்சகர்

(3) அத்திவாரம்

(4) இயேசுவின் மரணம்

(5) சிலுவை

(6) அவர் தன்னுடைய ஜீவனைக் கொடுத்தார்.

(7) கிருபையின் சங்கீதம் 23 (எபி. 13:20)

(8) பெரியமேப்பன்.

(9) திருப்தியாளன்.

(10) தெளிவாய்க் காட்டுதல்.

(11) கிறிஸ்த்துவின் வாழ்க்கை

(12) தேற்றுபவர்

(13) *அவர் அன்பைக் கொடுத்தார்.*

(14) வழிநடத்தும் சங்கீதம் 24 (1 பேதுரு. 5:4)

(15) பிரதான மேய்ப்பன்.

(16) சர்வவல்லவர்.

(17) எதிர்பார்ப்பு

(18) கிறிஸ்த்துவின் வருகை

(19) முடி

(20) அவர் தன்னுடைய வெளிச்சத்தை கொடுக்கிறார்.

(21) மகிமை

8. **சங்கீதம்** 34

**தெரிவு செய்த வசனங்கள்** :

| |
|---|
| இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள் அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. (34:6-9). |

**விளக்கம்**: எங்கள் கிருபையிலுள்ள பிதா தன்னுடைய தேவதூதர்களை அனுப்பி உதவி செய்கிறார, பாதுகாக்கிறார், இவ்வாறாக தன்னுடைய உலக பிள்ளைகளை உற்சாகமளிக்கின்றார். (2 ராஜா. 6:17 எபி. 1:14 அப் 12:7.)

9. **சங்கீதம்** 35

**தெரிவு செய்த வசனங்கள்.** :

| |
|---|
| கொடுமையான சாட்சிகள் எழும்பி நான் அறியாததை என்னிடத்தில் கேட்கிறார்கள். நான் செய்த நன்மைக்குப் பதிலாகத் தீமைசெய்கிறார்கள் என் ஆத்துமா திக்கற்றுப்போகப் பார்க்கிறார்கள். அவர்கள் வியாதியாயிருந்த போது இரட்டு என் உடுப்பாயிருந்தது நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரப்படுத்தினேன் என் ஜெபமும் என் மடியிலே திரும்பவந்தது. (35:11-13). |

**விளக்கம்** : இவ்விதமான ஜெபம் உண்மையில் மிகவும் கஷ்டமானது. இவர்கள் உனக்கு ஏற்படும் தொல்லைகளில் சந்தோஷமாக இருக்கின்றார்கள், இவர்கள் உனக்காக ஜெபம் செய்வதற்கு நினைப்பதும் இல்லை, அதனால் இப்படிப்பட்டவர்களுக்காக ஜெபம் செய்வது மிகவும் கஷ்டமாகவே காணப்படும்.

10. **சங்கீதம் 37**

## தெரிவு செய்த வசனங்கள்

| |
|---|
| பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள் கர்த்தரை நம்பி நன்மைசெய் தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள் (37:1-3). |
| "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்." (வச. 4). |
| "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். " (வச. 5). |
| கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு காரியசித்தியுள்ளவன் மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன் மேலும் எரிச்சலாகாதே. (வச. 7). |
| துன்மார்க்கன் நீதிமானுக்கு விரோதமாய்த் தீங்கு நினைத்து, அவன் பேரில் பற்கடிக்கிறான். (12) |
| ஆண்டவர் அவனைப்பார்த்து நகைக்கிறார் அவனுடைய நாள் வருகிறதென்று காண்கிறார். (13) |
| உத்தமர்களின் நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கிறார் அவர்கள் சுதந்தரம் என்றென்றைக்கும் இருக்கும் (. 18). |
| நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார். (வச. 23). |
| அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார் (வச 24). |
| நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன் ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும்இ அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை (வச. 25). |

கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர் அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள் துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம். (வச. 28).

**விளக்கம்** : இந்தச் சங்கீதத்தை பயபக்திக்கு ஏறிச் செல்லுதல் என்று அல்லது துக்கத்திலிருந்து(வச. 1) பெருமகிழ்ச்சிக்கும் ஏறிச் செல்லுதல் என்று அழைக்கப்படும். (வச. 34). ஏறிச் செல்லும் ஐந்துபடிகள் உள்ளன. அவையாவன். 1.**பயப்படாதே**- எனக்கு ஒரு பிரச்சனையுண்டு. 2. **நம்பிக்கை கொள்**- கர்த்தர் என் பிரச்சனைகள் யாவற்றிற்கும் பதில் தருவார். 3. **மகிழ்ச்சியாயிரு**–அவர் என்னுடைய பிரச்சனைகள் யாவற்றிற்கும் பதில் தருவார் என நம்புகிறேன். 4.**ஒப்புக் கொடுத்தல்---** நான் என்னுடைய பிரச்சனைகள் யாவற்றையும் கர்த்தரிடம் கொடுத்துவிட்டேன். 5.**இளைப்பாறு**.–நான் என்னுடைய பிரச்சனைகள் யாவற்றையும் கர்த்தரிடம் விட்டுவிட்டேன்.

இந்த சங்கீதத்தில் கர்த்தர் இரண்டு விடயங்களைப் பார்த்து நகைக்கின்றார்.

1. தன்னுடைய பிள்ளைகளை விழுத்தப்பார்ப்பவர்களைப் பார்த்தும் (சங். 2:2-4)

2. தன்னுடைய பரிசுத்தவான்களை விழுத்தப்பார்க்கிறவர்களைப் பார்த்தும் (சங். 37:13 59:8)

இந்த சங்கீதத்தில் ஜெபம் செய்பவர் கர்த்தரைக் கேட்பது அவனுடைய வாழ்க்கையைக் குறுகிப் போகச் செய்யும்படி ஜெபம் செய்கின்றார், அதனால் அவர் ஒவ்வொரு நாளையும் கர்த்தருடைய கரத்தில் ஒப்படைக்கின்றார். இங்கு அது 37 18 ஒப்புக் கொடுப்பதைப் பார்க்கிறோம். இன்னுமொரு சங்கீதத்தில் "என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்." சங். 31:15). கர்த்தாவே நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும் என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். (சங். 39:4). உமது அடியேனுடைய நாட்கள் எம்மாத்திரம்? என்னைத்

துன்பப்படுத்துகிறவர்களுக்கு நீர் எப்பொழுது நியாயத்தீர்ப்புச் செய்வீர்? (சங். 119:84) சங்கீதம் 23,24, 25, 28 என்பவற்றில் கர்த்தருடைய பாதுகாப்புத் திட்டத்தை தன்னுடைய ஊழியக்காரருக்கு வெளிப்படுத்துவதையும் அதன் நன்மைகளையும் பார்க்கலாம்.

## 11. **சங்கீதம்** 40

### தெரிவு செய்த வசனங்கள் :

| |
|---|
| கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவர் என்னிடமாய்ச் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி என் அடிகளை உறுதிப்படுத்தி நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார் அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள். (40:1-3). |
| என் தேவனாகிய கர்த்தாவே நீர் எங்கள் நிமித்தஞ் செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது நான் அவைகளைச் சொல்லி அறிவிக்கவேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள். (வச 5). |

**விளக்கம்** ::

இந்த 1-3 வார்த்தைகள் மற்ற சமயங்களுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை காண்பிக்கின்றது.

**இந்த கதையைக் கொஞ்சம் கவனியுங்கள்.:-** இங்கு ஒரு மனிதன் ஆழமான குழியில் விழுந்துவிட்டான். அவன் விழும் போது கையை ஊண்டியதால் கைகள் இரண்டும் முறிந்துவிட்டன அதேபோல் அவனது கால்களும் முறிந்துவிட்டன. அவனால் குழியைவிட்டு வெளியே வரமுடியாத்தால் தனக்கு உதவி செய்யும்படி கத்திக் கொண்டே இருந்தான். அங்கே வந்த ஒருவர் அவனைக் குனிந்து பார்த்து, தம்பி நீ கவனமாகப் பாதையைப் பார்த்து நடந்துவந்திருந்தால் இப்படி ஒரு நிலை உனக்கு ஏற்பட்டிராதல்லவா என்று கூறி இனிமேல் நடக்கும் போது கவனமாக நடக்கவும் என்று புத்திகூறிவிட்டுச் சென்றார். வேறு சமயத்தைச் சேர்ந்த இன்னுமொருத்தர் அங்கு வந்து, இப்போது உமக்கு உதவி கட்டாயம்

தேவையாக இருக்கின்றது. நான் கொஞ்சம் நேரத்தோடு வந்திருந்தால் என்னால் உதவி செய்திருக்க முடியும். இப்போது நான் மிகவும் அவசரமாகச் செல்லுகிறென் என்று கூறி, நீர் எழும்பி என்னுடைய கையைப் பிடியும் என்று கையை நீட்டினார். ஆனால் கைகால்கள் உடைந்த நிலையில் இருந்தவரால் அசையவே முடியவில்லை. அதனால் உதவிக்கு வந்தவர் துக்கத்தோடு சென்றுவிட்டார். இதனால் வேதனையுடன் இருந்த மனிதனின் நம்பிக்கை முற்றுமாக அகன்று போயிற்று. அதனால் அவர் வானத்தை அண்ணார்ந்து பார்த்து கர்த்தாவே எனக்கு உதவி செய்யும் என்று உரத்த குரலில் கத்தினார். இந்தகூக்குரல் கர்த்தரின் காதில் எட்டியது. உடனடியாகவே தேவன் தான் அங்கு வந்தார் ஒரு மனிதனைப் போல், அவர் அந்த குழியில் இறங்கி அந்த மனிதனைத் தூக்கி வெளியில் கொண்டுவந்தார். அப்போது அந்தமனிதனின் இருதயத்தில் இரட்சிப்பின் பாடல் இருதயத்தில் வந்தது. இதுதான் இரட்சிப்பு என்பதாகும். இந்த சங்கீதத்தில் தாவீது 5ம் வசனம் இவ்வாறு கூறுகின்றார். கர்த்தர் தனக்குச் செய்யாத அற்புத காரியங்களை தாவீது இங்கு குறிப்பிடுகின்றார். இன்னும் சில வேதாகமப் பகுதிகளை நாம் இங்கு சுட்டிக் காட்டுகின்றோம். (சங். 92:5 139:17, 18 எரே. 29:11).

12. **சங்கீதம். 42**

**தெரிவு செய்த வசனங்கள்**:

| |
|---|
| என் ஆத்துமாவேஇ நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு அவர் சமுகத்து இரட்சிப்பினிமித்தம் நான் இன்னும் அவரைத் துதிப்பேன். (42:5). (42:11 43:5.) |

**விளக்கம்** :

இந்த மூன்றுவசனங்களும் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் கூறுகின்றன. தனக்குத் தானே ஒரே விடயத்தைக் கூறுவது எவ்வளவு பொருத்தமற்ற விடயம் என்று உலகத்தார் கூறுகிறார்கள்.

ஆனால், அவர் கேட்கிறார் பின்பு அவரே பதிலையும் கூறுகின்றார். தன்னுடைய சொந்த ஆத்துமாவுக்கே கேள்விகளைக் கேட்டுப் பதிலையும் கொடுத்து ஆறுதல் படுத்தும் பயிற்சியானது எவ்வளவு சிறப்பானது. மற்றவர்களை ஆறுதல் படுத்துவது போல தன்னைத் தானே ஆறுதல் படுத்துகின்றார். இது அவருக்கு எவ்வளவு பிரயோசனமாக இருக்கும்.

13. **சங்கீதம் 46**

**தெரிவு செய்த வசனங்கள்**: :

| |
|---|
| தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும்இ ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும் மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும் அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம். (சேலா.) 46:1-3) |
| ஜாதிகள் கொந்தளித்தது ராஜ்யங்கள் தத்தளித்தது அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார் பூமி உருகிப் போயிற்று. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். (சேலா.) பூமியிலே பாழ்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள். அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார் வில்லை ஒடித்து ஈட்டியை முறிக்கிறார் இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார். (வச. 6-9). |

**விளக்கம்** : இது மிகவும் விருப்பமுள்ள பாடலாக எஞ்சியுள்ள இஸ்ரவேலர்களுக்கு மகா உபத்திரப காலத்தில் தங்களைக் கன்மலைகளுக்குள் மறைத்துக் கொண்டிருக்கும் போது பாடம்படும் பாடலாகவரலாம். (ஏசா. 26:19, 20 வெளி. 6:12-14 மத். 24:15, 16 வெளி. 12:14).

14. **சங்கீதம் 50**

**தெரிவு செய்த வசனங்கள்**: :

| |
|---|
| பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார். (50:5). |
| சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன் வெளியில் |

நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள். நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன் பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ? நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்து (50:10-14).

**விளக்கம்** : எபிரேயக் கடவுள்கள் இரத்தவெறிபிடித்தவர்கள் அவர்கள் தங்களை வணங்குபவர்களுக்கு உதவிசெய்வதைவிடுத்து இரத்தப் பலியையே விரும்புகின்றன என்ற குற்றச் சாட்டுக்கள் பழைய ஏற்பாட்டில் உள்ள சில நகரங்களில் காணப்பட்டன. கர்த்தர் எப்போதும் பலியை அல்ல மனிதர்களின் ஆத்துமாவில்தான் அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்று ஆசாப் கூறுகின்றார். தெய்வீக தியானம் செய்தலே மாமிச பலிகளை விட அவர் விரும்பும் பலிகளாக இருக்கின்றது. வெளியில் காணப்படும் வெண்கல பலிபீடத்தைவிட உள்ளான இருதயப் பலிபீடத்தையே விரும்புகிறார். மோசேயும் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாக இதனையே கூறியுள்ளார். (உபா. 10:12-16.)

## 15. **சங்கீதம்** 56

### **தெரிவு செய்த வசனங்கள்**:

| |
|---|
| என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர் என் கண்ணீரை உம்முடைய துருத்தியில்வையும் அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது? (56:8). |
| நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ? (56:13). |

**விளக்கம்**: வசனம் 8 கூறப்பட்டுள்ளது வார்த்தையானது, அனேகமாக யாவரையும் ஆறுதல்படுத்தவும் உற்சாகப்படுத்தவும் பயன்படும். தாவீது தன்னுடைய கண்ணீரைப் பாதுகாக்கும்படி கர்த்தரிடத்தில் கேட்கிறான்.

இந்த கண்ணீர்க் கதையானது ஆதியாகமத்தில் ஆரம்பித்து கடைசியில் யோவானால் எழுதப்பட்ட வெளிப்படுத்தல் புத்தகம்வரை வருகின்றது.

ஆபிரகாமின் மனைவி மரணமடைந்து புதைக்கப்பட்ட நேரத்தில் ஆபிரகாம் அழுதான் (ஆதி.23:2). அதைத் தொடர்ந்து யாக்கோபும் யோசேப்பும் கண்ணீர்விட்டார்கள். (ஆதி. 37:35) மீரியாமிற்காக மோசே அழுதார், (எண். 12:13) அன்னாள் ஒரு மகன் கிடைக்க வேண்டும் என்று அழுதாள். (1சாமு. 1:10) சாமுவேல் சவுலுக்காக அழுதான், (1 சாமு. 15:11 35) தாவீது அப்சலோமுக்காக அழுதான். (2சாமு.18:33). இந்த நிலையானது தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். எசேக்கியா தனக்காக அழுதான். (2 ராஜா. 20:2, 3) நெகேமிய எருசலேமிற்காக அழுதான், (நெகே. 1:4) ஒரு தகப்பன் தன்னுடைய சிறு மகளுக்காக அழுதான் (மாற். 5:39)இ ஒரு சகோதரி தன்னுடைய இறந்துபோன சகோதரனுக்காக அழுதாள். (யோவான்11). கர்த்தருக்குரிய பிள்ளைகளது கண்ணீர் இவ்வாறு சிந்தப்படுவதை நாம் அவதானிக்கலாம். அவரும் லசருவுக்காக அழுதார். (யோவான். 11:35) அத்துடன் எருசலேமிற்காகவும் அழுதார். (லூக். 19:41). கடைசியாக வெளி. 5:5 வரை அழுகை தெடர்ந்து வருவதை நாம் அவதானிக்கலாம். இறுதியில் கர்த்தரே நம் எல்லோரது கண்ணீரையும் துடைக்கின்றார். (வெளி. 21:4).

## 16. சங்கீதம் 63

### தெரிவு செய்யப்பட்ட வசனம் :

| |
|---|
| “என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். |
| ”(63:6). |

**விளக்கம்** : சங்கீதப்புத்தகத்தில் தாவீது பல நேரங்களில் ஜெபம் செய்வதைப் பார்க்கலாம். விஷேசமாக தன்னுடைய மேய்ப்பனைப் பாரப்பதற்கு அவர் இரவு நேரத்தைத் தெரிவு கர்த்தரைத் தேடுவதில் சந்தோஷமடைகின்றார். செய்துள்ளதைக் காணலாம். இதை நாம் 6ம் வசனத்தில் காணலாம். நடு இரவில் அவர் கர்த்தருக்குச் சொல்லும் செய்தி என்னவென்றால், உங்கள் படுக்கையிலே உங்கள்

இருதயத்தில் பேசிக் கொண்டு அமர்ந்திருங்கள். சங். 4:4). “நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து இராக்காலத்தில் அதை விசாரித்து (சங். 17:3). “இரவிலே கூப்பிடுகிறேன் எனக்கு அமைதலில்லை.” (சங். 22:2). ஆகிலும் கர்த்தர் பகற்காலத்திலே தமது கிருபையைக் கட்டளையிடுகிறார் இராக்காலத்திலே அவரைப் பாடும் பாட்டு என் வாயிலிருக்கிறது” (சங். 42:8). “இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்ளுகிறேன்.” (சங். 77:6). “இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும்.” (சங். 92:2). “இராக்காலத்தில் உமது நாமத்தை நினைத்து உமது வேதத்தைக் கைக்கொள்ளுகிறேன்.” (சங்119:55). “பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள். ” (சங். 149:5).

**17. சங்கீதம் 66**

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

> “என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.” (66:18).

**விளக்கம்**: வேதாகமம் முழுவதும் ஜெபக் கொள்கை கூறப்பட்டுள்ளது, இது பாவிக்கும் பரிசுத்தவானுக்கும் ஒரேவிதமாகவே கூறுகின்றது.

அறிக்கை செய்யப்பட்ட பாவங்கள் யாவற்றையும் இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் மன்னி க்கும், ஆனால் எங்களுடைய தேவையற்ற மன்னிப்புக்கான காரணங்களை ஏற்றுக் கொள்ளாது. (நீதி. 15:29 28:9 ஏசா. 1:15 59:1 2 யோவா. 9:31 யாக். 4:3.)

**18. சங்கீதம் 68**

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

> “தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும் ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது” (68:17).

**விளக்கம்**::

தாவீது பரலோகத்திலுள்ள தேவதூதர்களை எண்ணுகின்றார். இந்த எண்ணிக்கையானது தானியேல் 7:10, மத. 26:23, வெளி 5:11 என்பவற்றுடன் பார்க்கும் போது குறைவுள்ளதாக இருக்கின்றது.

**19. சங்கீதம் 69**

## தெரிவு செய்யப்பட்ட வசனம்:

"ஆனாலும் கர்த்தாவே, அநுக்கிரககாலத்திலே உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்கிறேன் தேவனே உமது மிகுந்த கிருபையினாலும் உமது இரட்சிப்பின் சத்தியத்தினாலும் எனக்குச் செவிகொடுத்தருளும்." (69:13).

**விளக்கம்:: இன்றே அனுக்கிரக நாளாகும், இன்றே நாம் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

கர்த்தருடைய விண்ணப்பத்தைப் பார்ப்போம். :

1. பாவியானவன் இன்றே தன்னுடைய இருதயத்தைக் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். (2கொரி. 6:2).

2. பரிசுத்தவான்கள் இன்றே தங்கள் சரீரத்தைக் கிறிஸ்துவுக்காக் கொடுக்கின்றார்கள். (ரோம.6:19 12:1-3, ˙எபி.3:7. 13,15). இதற்கான மிக சிறப்பான காரணம் நாளையத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே(நீதி 27:1 யாக் 4:13-15.)

**20. சங்கீதம் 71**

## தெரிவு செய்யப்பட்ட வசனம்:

| |
|---|
| "கர்த்தராகிய ஆண்டவரே நீரே என் நோக்கமும் என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்." (71:5). |
| "முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளிவிடாமலும் என் பெலன் ஒடுங்கும் போது என்னைக் கைவிடாமலும் இரும்." (71:9). |
| "தேவனே என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்து வந்தீர் இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்." (71:17). |

| |
|---|
| “இப்பொழுதும் தேவனே இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும் வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும் முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக” (71:18). |

**விளக்கம்**.”இது வயோதிபர்களின் சங்கீதம் என்று கூறப்படுகின்றது. வயோதிப வயது கிறிஸ்த்துவைப் போல மாறவேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டுவருகின்றது. சில நெரங்களில் வயோதிபர்கள் கவனிப்பாரற்று விடப்படும் சூழ்நிலைகளும் ஏற்படுவதுண்டு. (சங்.25:7 37:25 பிரசங்கி. 11:9இ 10 12:1).

21. **சங்கீதம்** 73

## தெரிவு செய்யப்பட்ட வசனம்:

| |
|---|
| “ஆனாலும் என் கால்கள் தள்ளாடுதலுக்கும் என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று.” (73:2). |
| “துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில் வீம்புக்காரராகிய அவர்கள்மேல் பொறாமை கொண்டேன்.” (வச. 3). |
| “நரர்படும் வருத்தத்தில் அகப்படார்கள் மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள்.” (வச. 5). |
| |
| “அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது. ” (வச. 7). |
| “இதோ இவர்கள் துன்மார்க்கர் இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்.” (வச. 12). |
| “நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன்.” (வச13). |
| |
| “நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும்இ காலைதோறும் |
| தண்டிக்கப்பட்டும் இருக்கிறேன். ” (எ. 14). |
| |
| “இதை அறியும்படிக்கு யோசித்துப்பார்த்தேன் நான் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும் அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது. நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி |

பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப்போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள். ” (73:16-19).

**விளக்கம்**: வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது கிறிஸ்த்தவர்கள் அதிகமாகத் துன்பப்படுவது ஏன் என்று ஆசாப் கேட்கின்றார். ஏன் நீதிமான்கள் துன்பப்படும் போது கெட்டவர்கள் விருத்தி யடைகிறார்கள்? லாசரஸ் கடும் துன்பத்தில் வாழ்ந்தான், ஆனால் ஐசுவரியவானோ மேலும் ஐசுவரியவானான், (லூக். 16:19-31). சவுலின் கொடுமையினால் தாவீது ஓடுவதைப்பார்த்து சாமுவேல் அதிகம் துக்கப்பட்டான்.

## 22. **சங்கீதம்** 75

### தெரிவு செய்யப்பட்ட வசனம்:

“உங்கள் கொம்பை உயரமாய் உயர்த்தாதிருங்கள் இறுமாப்புள்ள கழுத்துடையவர்களாய்ப் பேசாதிருங்கள். கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது. ” (75:6இ 7).

**விளக்கம்**: பாபிலோனின் மகத்துவமுள்ள ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு தரிசனம் கண்டார், கர்த்தருடைய கட்டளையினால் மிகவும் உயரமான விசாலமான மரம் வெட்டப்படுவதாக கனவு கண்டார். தானியேல் அதற்கு விளக்கம் கொடுக்கும்போது, பெருமையுள்ள ராஜாவை எச்சரித்து, அவரைத் தன்னைத் தானே தாழ்த்தும்படி கூறினான். அல்லாவிட்டால் அவன் வெட்டி வீழ்த்தப்படுவான் என்று கூறினான். அதுமட்டுமல்ல அவன் ஏழுவருடங்கள் துன்ப ப்படவேண்டியும் வரும் என்றும் எச்சரித்தான். ஆனால் அந்த பெருமையுள்ள ராஜா அவரின் சொல்லைக் கேட்கவில்லை. அதன்பிற்பாடு அவனது வாழ்க்கையில் சூறாவழி வீசியது. (தானி. 4:29-37.)

## 23. **சங்கீதம்** 76

### தெரிவு செய்யப்பட்ட வசனம்:

“கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும் மிஞ்சுங்கோபத்தை நீர் அடக்குவீர்.” (76:10).

**விளக்கம்: வேதாகமத்திலிருந்து கிடைக்கும் உதரணங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன, அவற்றைக் கவனிக்கவும்.**

1. **ஏசாவின் கோபத்தினால்** யாக்கோபு ஓடினான், அங்கே அவன் ராகேலைச் சந்தித்தான். இதனால் கர்த்தரின் நாமம் துதிக்கப்பட்டது. (ஆதி. 27:41-45 29:10).

2. **பதினொரு சகோதரரின்** கோபம் யோசேப்பை எகிப்தியருக்கு அடிமையாக விற்கப்ப ண்ணியது, அங்கோ சில காலம் கடந்தபின்பு அவன் பிரதம மந்திரியாக வந்தான். இதனால் கர்த்தரின் நாமம் துதிக்கப்பட்டது. (ஆதி. 37:23-28 41:38-44).

**பிற்பாடு தன்னுடைய சகோதரர்களுக்கு யோசேப்பு ஞாபகப்படுத்தியது**. : நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள் தேவனோ இப்பொழுது நடந்துவருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக முடியப்பண்ணினார். இதனால் கர்த்தரின் நாமம் துதிக்கப்பட்டது (ஆதி. 50:20).

3. **மோபாபிய ராஜா**, இஸ்ரவேலர்களைச் சபிப்பதற்கு ஒரு தீர்க்கதரிசியை வாடகைக்கு அமர்த்தினான், ஆனால் அதன் முடிவிலோ அழகான நல்ல ஒரு இஸ்ரவேலர்களை ஆசீர்வதித்து தீர்க்கதரிசனம் வந்தது. இதனால் கர்த்தரின் நாமம் துதிக்கபட்டது (எண். 22:1-6 24:17).

4. **ஆமான் யூதன்** ஒருவனைக் கெலை செய்வதற்காக தூக்குமரம் ஒன்றைச் செய்தான், ஆனால் கடைசியில் அவனே அந்த தூக்குமரத்தில் தொங்கவிடப்பட்டான். கர்த்தரின் நாமம் துதிக்கப்பட்டது (எஸ்தர். 5:12-14 7:10).

6. **இஸ்ரவேலின் ராஜா** ஒருவர் வேதாகமப் புத்தகம் ஒன்றை கொழுத்தினார், ஆனால் அந்தப் புத்தகம் திருப்பி எழுதப்பட்டது, அதைக் கொழுத்தினவரின் அழிவையும் தீர்க்கதரிசனமாக

அந்தப்புத்தகத்தில் சேர்த்துக் கூறியிருந்தது. கர்த்தரின் நாமம் துதிக்கப்பட்டது. (எரே. 36:22, 23, 27, 28, 29, 30, 31, 32).

7. **பரிசேயர்களின் கோபம்** கிறிஸ்த்துவை இரண்டு கள்வர்கள் மத்தியில் சிலுவையில் அறையவைத்தது, ஆனால் அதன் முடிவு ஒரு கள்வன் சிலுவையில் தொங்கும் போதே இரட்சிக்கப்பட்டான். கர்த்தரின் நாமம் துதிக்கப்பட்டது (லூக். 23:39-43).

ப. **ரோம சக்கரவத்தியின்** கோபம் , அப்போஸ்தலர் யோவானை சுவிஷேசம் அறிவிப்பதிலிருந்து தனிமைப்படுத்தி பத்மு என்னும் தீவிலே தனிமைப்படுத்தியது, அதன் முடிவு வெளிப்படுத்தல் புத்தகம் வெளிவந்தது. கர்த்தரின் நாமம் துதிக்கப்பட்டது (வெளி. 1:9).

24. **சங்கீதம் 80**

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

| |
|---|
| “இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப் போல் நடத்துகிறவரே, செவிகொடும் கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும். ” (80:1). |
| “நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர்.” (80:8). |

**விளக்கம்**: இரண்டு பொன்னினாலான கேருபீன் சிலைகள் 15 அடி உயரமானவை , அவைகள் உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள கிருபாசனத்தில் உள்ள மகாபரிசுத்த ஸ்தலத்தில் காணப்படுகின்றன அங்கே தேவாதி தேவனின் பிரசன்னம் இருக்கும். இவைகள் 66 தரம் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளன

குறிப்பு. :

1. மோசேயும், சாலொமோனும் அவற்றை மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைத்தார்கள். (யாத்.25:19 1 ராஜா. 6:27).

2. கர்த்தர் கேரூபின்களின் மத்தியிலிருந்து மோசேயுடன் பேசினார். (எண். 7:89).

3. கேரூபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே பூமியின்

ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர் என்று எசேக்கியா பேசினார். (2 ராஜா. 19:15).

4. பறந்து கொண்டிருக்கின்ற நான்கு கேருபீன்கள் மத்தியில் கர்த்தருடைய மகிமையை எசேக்கியேல் கண்டார். (எசே. 10).

5. ஆயிரம் வருட ஆட்சியில் தோன்றும் ஆலயத்தில் கேருபீன்கள் சித்தரிக்கப்பட்டிருந்தன. (எசே. 41:17-20). ஆசாப்பின் சங்கீதத்தில் கூறப்பட்டுள்ளது போல அவருடைய சங்கீதம் மரித்துக் கொண்டிருக்கு. திராட்சைச் செடி என்று தலைப்பிடப்பட்டுள்ளது. திராட்சைச் செடியானது இஸ்ரவேலின் அடையாளமாக வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆசாப் திராட்சைச் செடி பற்றிக் கூறுவது என்ன என்று கவனிப்போமாக

1. கர்த்தர் எகிப்திலிருந்து இதனைக் கொண்டு வந்தார். (வச. 8).

2. தான் தெரிவு செய்யப்பட்ட தேசத்தில் நாட்டினார். (வச. 8).

3. அவர் நிலத்தைத் துப்பரவு செய்து, மண்ணை உழுது திராட்சைச் செடியை நாட்டினார்.(வச 9)
4. திராட்சை வேர்விட்டு சிறிது காலம் நன்றாக வளர்ந்தது. (வச. 9).

5. திராட்சை மலைகளை மூடிவளர்ந்தது, கேதுரு மரங்களைப் போல உயர்ந்து வளர்ந்தது. (வச. 10).

6. இது பெருங்கடலிருந்து ஐபிராத்து நதிவரை சென்றது. (வச. 11).

7. ஆனால் கர்த்தர் அதன் குருத்தை முறித்து அதனைப் பாதுகாத்தார். (வச. 12).

அ. அந்நியர்கள் இதன் பலனை அனுபவித்தார்கள். (வச. 12).

8. காட்டுப்பன்றி அதன் வேரைப்பிடுங்கினது, காட்டு மிருகங்கள் அதனைச் சாப்பிட்டன. (வச. 13).

9. இவர்களுடைய எதிரிகள் இதனை வெட்டி எரித்துவிட்டார்கள். (வச. 16).

தன்னுடைய திராட்சைத் தோட்டத்திற்கு ஏன் கர்த்தர் இவ்வாறு செய்தார்? அதன் விடை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (ஏசா. 5:1-4 எரே. 2:21 ஓசி. 10:1.). அதைச் சுற்றியுள்ள பசித்ததேசங்களுக்கு கனி கொடுக்கும் வேண்டும் என்பதற்காகவேயாகும்.

ஆனால் இது அவ்வாறு செய்யவில்லை இந்த காட்டுத்திராட்சையையும் உதவாத திராட்சையையும் கர்த்தர் ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்தார்.

இயேசு துக்கத்துடன் பரிசேயரை ஒதுக்கிவைத்ததாகக் கூறுகின்றார். ஆகையால் தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்

(மத். 21:43). இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார் அவருக்கு அழகுமில்லைஇ சௌந்தரியமுமில்லை அவரைப் பார்க்கும்போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. இயேசுவே அந்த திராட்சைச் செடி. (ஏசா. 53:2)இ அவர் தன்னுடைய அற்புதங்கள் மூலமும், உவமைகள் மூலமும், ஜெபத்தின் மூலமும் நல்ல கனிகளைக் கொடுத்தார்.

இது பிற்பாடு சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்து பிதாவினுடைய பரலோக திராட்சையாக மாறியது. **யார் உலகத்தில் பிதாவினுடைய கனிகளைக் கொடுப்பது.?** இஸ்ரவேல் செய்யமுடியாததை விசுவாசிகள் செய்ய வேண்டும். கனிகளைக் கொடுக்க வேண்டும். இது அவரில் இணைந்திருப்பதன் மூலமே செய்ய முடியும். (யோவான் 15: 1-8) அதாவது அவரது வார்த்தையில் நாம் இணைந்திருப்பதன் மூலமாகவே இவற்றை நிறைவு செய்ய முடியும். அவரே திராட்சைச்செடி , அவரது கிளைகள் எங்கே?

அவரே திராட்சைச் செடி நாங்கள் அதன் கொடிகளாய் இருக்கின்றோம். செடியிலே கொடிகள் இருப்பதன் நோக்கம் பழம் கொடுப்பதற்காக மட்டுமேயாகும். இதுசெடியுடன் இணைந்திருக்காவிட்டால் தானாக பழம் கொடுக்கமாட்டாது. இது பழம் கொடுப்பதைத் தவிர வேறொன்னுக்கும் உதவாது. இதன்

தண்டிலிருந்து கட்டிடத்திற்கான மரமோ அல்லது தளபாடங்களோ அல்லது விறகாக எரிப்பதற்கோ இதன் தண்டுகள் பிரயோசனப்படாது. கனிகொடுப்பது மட்டுமே இதன் செயற்பாடாகும்.

25. **சங்கீதம்** 81

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

> "உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே உன் வாயை விரிவாய்த் திற நான் அதை நிரப்புவேன். என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை. ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன் தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள். ஆ என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன். " (81:10-14).

**விளக்கம்** : ஏறக்குறைய பத்து நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு, இஸ்ரவேலின் மீட்பர் ஒலிவ மலையில் தோன்றுவார். (சங். 23:37-39.)

26. **சங்கீதம்** 84

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

> "உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும்இ தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள். அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள் மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்துஇ சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள். " (84:5-7).

**விளக்கம்**:

வசனம் 7 இல் பலத்தில் வளர்வது பற்றிக் கூறப்படுகின்றது. மனித சுய பலத்தைவிட கர்த்தருடைய பெலன் மேலானதாகும்.

வேதாகமத்தில் பலம் என்பது மிக முக்கியமான வார்த்தையாக உள்ளது. இதில் பலம் என்பது மனிதனுடைய பலமானது கர்த்தரால் கொடுக்கப்படும் பலத்துக்கு நிகரானதல்ல. மனிதனுடைய பலம் வறண்டு போன்றது. (சங். 22:15). என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. (சங் 31:10). என் பெலனெல்லாம் போயிற்று (தானி.10:8). இவ்வாறு சிலர் கூறியிருப்பதைப் பார்க்கிறோம். **கர்த்தருடைய பெலன்.**: பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை இளைப்படைவதுமில்லை இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள் வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள் நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

“நீ பயப்படாதேஇ நான் உன்னுடனே இருக்கிறேன் திகையாதே நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். ” (சங். 41:10).
(சங். 27:1 28:7 29:11 43:2 46:1 81:1 118:14 119:28 பிலி. 4:13 1 பேது. 5:10 எபே. 3:16 ரோ. 5:6 2 திமோ. 4:17 2கொரி. 12:9.)

## 27. **சங்கீதம் 85**

### தெரிவு செய்யப்பட்ட வசனம்::

| |
|---|
| “உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?” (85:6). |
| |
| “கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன் அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார் அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக. நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படிஇ அவருடைய |

| |
|---|
| இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது. " (85:8, 9). |
| |
| "கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும் நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்." (85:10). |

**விளக்கம்**: :

6ம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது போல, உயிர்மீட்சி தாரும் என்ற வேண்டுதல் கர்த்தருடைய காதுகளுக்கு இனிமையாக இருக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் மட்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். பாவிகள் உயிர்ப்பிக்கப்படமாட்டார்கள் · அவர்கள் உயிர்த்தெழ வேண்டிய தேவையும் இருக்கின்றது. மரித்த மனிதன் உயிர்மீட்சி அடைய முடியாது. ஜீவனுடன் இருக்கிறவர்கள் மட்டுமே பயிர்ப்பிக்கப்பட முடியும். சில காலங்களுக்குப்பிற்பாடு ஆபகூக் தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் மீந்திருப்பவர்களுக்காக இவ்வாறு ஜெபம் செய்கின்றார். கர்த் தாவேஇ நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன் எனக்குப் பயமுண்டாயிற்று கர்த்தாவே வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும் வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும் கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும். " (ஆபகூக். 3:2 உயிர்மீட்சி அடைய வேண்டும் என்று விரும்புகிற ஆத்துமாக்களை கர்த்தர் உயிர்மீட்சி அடையப்பண்ணினதை சபைச் சரித்திரவாயிலாக நாம் அவதானித்து வந்துள்ளோம். கர்த்தருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்கு சமீபமாக இருக்கின்றது.

**ஆவிக்குரிய மறுமலர்ச்சியையம் உயிர்மீட்சியையும் கவனிப்போமாக.** :

1. யாக்கோபுவிற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (ஆதி. 35:2-4)
2. மோசேக்கு கீழ் நடந்த உயிர்மீட்சி. (யாத். 1431–15:21)
3. தாவீதிற்கு நடந்த கீழ் உயிர்மீட்சி (1 நாளா. 15:25-28 16:1-43 29:10-25)
4. சாலொமோனுக்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (2 நாளா. 7:4-11)
5. எலியாவிற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (1 ராஜா. 18:21-40)

6. ஆசாவிற்கு கீழ் நடந்த உயிர்ந்த உயிர்மீட்சி (1 ராஜா. 15:11-15)

7. ஜெகுவிற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி *(2 ராஜா. 10:15-28)*

8. யோசாயிற்கு நடந்த உயிர்மீட்சி (2 ராஜா. 22இ 2)

9. யோசபாத்திற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (2 நாளா. 20)

10. எசேக்கியாவிற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (2 நாளா. 29-31)

11. மசேக்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (2 நாளா. 33:11-20)

12. எஸ்றாவிற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (எஸ்றா 9இ 10)

13. நெகேமியாவிற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (நெகே. 13)

14. யோனாவிற்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (யோனா 3)

15. எஸ்தருக்கு கீழ் நடந்த உயிர்மீட்சி (எஸ்தர். 9:17-22)

16. யோவான் ஸ்நானகன் கீழ் நடந்த உயிர்மீட்சி (லூக். 3:2-18)

17. இரட்சகரின் கீழ் வந்த உயிர்மீட்சி (யோவான். 4:28-42)

18. பிரிப்புவிற்கு கீழ்வந்த உயிர்மீட்சி (அப் 8:5-12)

19. பேதுருவுக்கு கீழ்வந்த உயிர்மீட்சி (அப் 9:32-35 2:1-47)

20. பவுலுக்கு கீழ்வந்த உயிர்மீட்சி (அப் 13:14-52 17:10-12 18:8 19:18)

பத்தாவது வசனத்தில் ஜெபத்தின் அற்புத வல்லமை விளங்குகின்றது. இங்கு சமாதானப்படுத்த முடியாதவகையில் இரண்டு சோடிகள் காணப்படுகின்றன. அவைகள் கிருபையும் சத்தியமும், அடுத்தது நீதியும் சமாதானமும். கிருபை பாவியைப்பார்த்து அவனைத் தப்பவிடு என்று கூறும், ஆனால் அதற்கு சத்தியம் பாவத்தின் சம்பளம் மரணம் என்று வற்புறுத்தும். அதே போல சமாதானம் குழம்பிப்போயுள்ள பாவியைப்பார்த்து அமைதிப்படுத்த விரும்பும், ஆனால் நீதியானது ஆத்துமாவைப்பார்த்து பாவி கட்டாயம் மரிக்க வேண்டும் என்று கூறும். இதற்காக நாம் என்ன செய்யலாம்? பின்னும் ஒரு அற்புதம் நடந்தது. அன்பானது கிறிஸ்த்துவில் ஒரு வழியைக்

கண்டுபிடித்து. **அவை இரண்டும் ஒப்புரவாகி ஒன்றை ஒன்று முத்தம் செய்தன.**

28. **சங்கீதம் 88**

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

| |
|---|
| "என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது என் ஜீவன் பாதாளத்திற்குச் சமீபமாய் வந்திருக்கிறது." (88:3). |

**விளக்கம்**: இதுவே வேதாகமத்தில் காணப்படும் மிகத்துக்கமான ஜெபமாகும். ஒரு சிறிய நம்பிக்கையின் கீற்றாவது தென்படவில்லை.

29. **சங்கீதம் 90**

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

| |
|---|
| "எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்." (90:10). |
| "நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். " (90:12). |
| |

**விளக்கம்**:

இது மரணத்திற்கான சங்கீதம் அல்லது முதலாம் ஆதாமின் சங்கீதம் என அழைக்கப்படும். இது மோசேயினால் எழுதப்பட்டது. ஒரு மனிதன் எழுபது வருட வாழ்வின் முடிவு பற்றி பத்தாம் வசனம் கூறுகின்றது. ஆரம்ப முற்பிதாக்களின் வயது குறைப்பை ஆதியாகமத்தில் காணலாம்.

முதலாம் ஆதாம் கசப்பான பாவத்தின் கனியின் முடிவு சரீர மரணம் என்பதை அறிந்து கொண்டான். இதன் பின்னணியில் மனிதனின் முடிவு பற்றி 12 ம் வசனம் கூறுகின்றது. ("நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும். " (90:12). வீணாக்கப்பட்ட காலங்கள் மீண்டும் திரும்பக் கிடைக்க மாட்டாது

30. **சங்கீதம்.** 91

## தெரிவு செய்யப்பட்ட வசனம்:

| |
|---|
| “உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.” (91:1). |
| “உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்” (91:11). |
| “உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்” (91:12). |

**விளக்கம்:**

இது சங்கீதத்தின் ஜீவன் என்று சொல்லப்படுகின்றது. அல்லது **இரண்டாம் ஆதாமின்** சங்கீதம் என்றும், என்றும் சொல்லப்படுகின்றது. இந்த உலகத்தில் தன்னுடைய மகன் இருக்கும் போது அவரைக் குறித்துக் கூறப்பட்டவார்த்தைகளாகும். வசனம் 11 இல் தேவதூதர்கள் அவருக்குப் பாதுகாப்புக் கொடுப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.”

**கர்த்தர் உலகத்தில் இருக்கும்போது தேவதூதர்கள் மேற் கொண்ட சேவைகள் இங்கு கூறப்பட்டுள்ளதை அவதானிக்கவும்.**

1. அவர்கள் அவரை ஆராதித்தார்கள் (எபி. 1:6).

2. அவர்கள் அவரின் பிறப்பை அறிவித்தார்கள். (லூக். 1:26-38 2:8-14 மத். 1:20-23).

3. அவர்கள் அவருக்கு ஊழியம் செய்தார்கள்.

(1) பாலைவனத்தில் (மத். 4:11)

(2) பூங்காவில். (லூக். 22:43)

4. பிரேதக்கல்லறையில் கல்லைப்புரட்டிவிட்டார்கள். (மத். 28:2).

5. அவரின் உயிர்தெழுதலை அறிவித்தார்கள். (மத். 28:6).

6. அவர் பரம் ஏறுகையில் அவருடன் இருந்தார்கள். (அப்1:10இ 11).

7. அவரது இரண்டாம் வருகையில் அவரோடு வருவார்கள். (2 தெச. 1:7இ 8)

இந்த சங்கீதத்தின் 11ம் வசனத்தை இயேசு சோதிக்கப்படுகையில் கூறினார். நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். (மத். 4:6).

**31. சங்கீதம். 94**

**தெரிவுசெய்யப்பட்டவசனம்**:

என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது கர்த்தாவே உமது கிருபை என்னைத் தாங்குகிறது."(94:18).

**விளக்கம்**:: இந்த வார்த்தை மற்றய சங்கீதங்களைப் போல் விசுவாசிகளின் நித்திய பாதுகாப்பை விசுவாசிகளுக்குப் போதிக்கின்றது. நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும் அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார். (சங். 37:23இ 24.)

**32. சங்கீதம். 100**

**தெரிவு செய்யப்பட்ட வசனம்**:

"பூமியின் குடிகளே எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்." (100:1).

**விளக்கம்**: இது பழைய நூறாவது என்று அழைக்கப்படுகின்றது. அழகான சங்கீதமாகும், இது 23ம் சங்கீதத்தை ஒத்த்தாகும்.

**33. சங்கீதம். 103**

## தெரிவுசெய்யப்பட்டவசனம

| |
|---|
| "என் ஆத்துமாவேஇ கர்த்தரை ஸ்தோத்திரி என் முழு உள்ளமேஇ அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி." (103:1). |

**விளக்கம்**:

உண்மையிலேயே இந்த சங்கீதம் மிகவும் உயர்ந்ததும், உன்னதமானதுமானதாகும். யேகோவா தேவனுக்கு எழுதப்பட்ட மிகவும் மகிமையுள்ள துதிப்பாடலாகும். இது தாவீதின் உச்சக்கட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது. அவர் மிகுந்த உயரத்தைப்பிடிக்கின்றார், அவருடைய எண்ணங்கள் மிகவும் ஆழமானவைகள், அவரது இருதயம் வேதாகமத்தில் காணப்படும் சகல துதி, ஜெபங்களைவிட மேன்மையுள்ளதாக இருக்கின்றது.

34. **சங்கீதம்** 107

## தெரிவு செய்யப்பட்ட வசனம்:

| |
|---|
| "அவருடைய கிருபையினிமித்தமும் மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களா தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணினவர்கள் கர்த்தர் கொந்தளிப்பை அமர்த்துகிறார் அதின் அலைகள் அடங்குகின்றது." (வச. 9இ 10இ 29). |

**விளக்கம்**:

கர்த்தர் உயிரோடு இந்த உலகத்தில் இருந்த காலத்தில் இவற்றை நிறைவேற்றினார்.

107:9,10, என்பவற்றை நிறைவேற்றினார். ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. மத் 4:16 எபிரே 2:14இ 15. ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.

அவர் நிறைவேற்றினார். 107:29இ அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி எழுந்துஇ காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று. மத் 8:26.

## 35. **சங்கீதம்** 111

**தெரிவுசெய்யப்பட்டவசனம்**:

| “கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.” (111:10). |
|---|

**விளக்கம்**:

வேதாகமத்தில் பயம் என்ற வார்த்தை கூறப்பட்டுள்ளது, விஷேசமாக சங்கீதங்களில் நுறுதடவைகளுக்குமேல் கூறப்பட்டுள்ளது, இது அனேகமாக ஜெபத்துடனும் துதியுடனும் சம்பத்தப்பட்டுள்ளன.

இந்தவகையான பயம் அச்சமூட்டுவதாய் இருக்காமல், கர்த்தரின்பால் பயபக்தியுள்ளதாக இருப்பதாகும். இவ்வகையான பயம் இன்ற உலகத்தில் மிகவும் அருகியுள்ளது. மனிதவர்க்கத்தின் கொடுமைகளைப் பரிசுத்த பவுல் விபரிக்கும் போது “அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை” (ரோ. 3:18). பயம் என்ற வார்த்தை கர்த்தருடன் தொடர்பு கொள்வதற்கும் ஜெபத்திற்கும் உரியதாக இருக்கின்றது. “இப்பொழுதும் இஸ்ரவேலே நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளிலெல்லாம் நடந்து அவரிடத்தில் அன்புகூர்ந்து உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து” (உபா. 10:12).

“ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு கர்த்தரைச் சேவியுங்கள்.” (சங்.2:11). “நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்துகொள்ளுவேன்.” (சங். 5:7).“அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள் கர்த்தர் கவனித்துக் கேட்பார் கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது” (மல்கியா. 3:16).

**36. சங்கீதம் 118**

## தெரிவு செய்யப்பட்ட வசனம்:

| |
|---|
| “கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும் என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அது கர்த்தராலே ஆயிற்று அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள் இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.” (சங். 118:18. 23, 24). |

**விளக்கம்** :.இந்த 18ம் வசனத்தின் பிரகாரம் யோபுவின் வாழ்க்கை இவ்வாறாக அமைந்தது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும். வசனம் 23ம் 24ம் எல்லா விசுவாசிகளினாலும் உரிமை கொணடாடப்படக் கூடிய வசனங்களாகும். ரோமர் 8: 26 இவ்வாறு கூறுகின்றது “அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்”.

**37. 119**

## தெரிவுசெய்யப்பட்டவசனம்:

| |
|---|
| “நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.” (119:11). |
| “நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்.” (119:71). |
| கர்த்தாவே உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும்இ உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன். (119:75). |
| “கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது” (119:89). |
| “உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்.” (119:99). |
| |
| “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.” (119:105). |
| |

“உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.” (119:130).

**விளக்கம்** : வேதாகமத்திலுள்ள மிக நீண்ட சங்கீதம் இதுவாகும்.இதனுடைய முழு பொருளும் கர்த்தருடைய வசனமாகும்.

இதில் ஐந்து வசனங்களைத் தவிர 176 வசனங்களும் மேற்கோள்களைக் கொண்டுள்ளன. இந்தச் சங்கீதத்தில் சங்கீதக்காரன் வேதாகமத்திற்கு ஒன்பது தலைப்புக்களைக் கொடுக்கின்றார். அத்துடன் 12 ஊழியங்களைப்பற்றியும் கூறுகின்றார்.

**ஒன்பது தலைப்புக்கள்.**

(1) அவரது நியாயப்பிரமாணம். (வச. 1)

(2) அவரது சாட்சிகள். (வச. 2)

(3) அவரது வழிகள். (வச. 3)

(4) அவரது நீதிப்போதனைகள். (வச. 4)

(5) அவரது பிரமாணங்கள் (வச. 5)

(6) அவரது கட்டளைகள் (வச. 6)

(7) அவரது நீதியான நியாயத் தீர்ப்புக்கள். (வச. 7)

(8) அவரது வார்த்தை (வச. 9)

(9) அவரது அதிகாபூர்வமான பிரமாணங்கள். (வச. 91)

**பன்னிரண்டு ஊழியங்கள்.**

(1) **சுத்தம்பண்ணுதல்** (வச. 9)

(2) **உயிர்ப்பியும்** (வச. 25)

(3) **பலப்படுத்தல்**. (வச 28)

(4) **உறுதிப்படுத்தும்** (வச. 38)

(5) **எதிர்த்து நிற்றல்.** (வச. 42)

(6) **ஆறுதல்படுத்தல்** (வச. 50)

(7) **விளங்கப்படுத்தல்** (வச. 98இ 99)

(8) **வெளிச்சமாயிருத்தல்** (வச. 105)

(9) **உறுதியளித்தல்** (வச. 114)

(10) **ஆதரித்தல்** (வச. 116)

(11) **சமாதானம் ஏற்பாடு செய்தல்** (வச. 165)

(12) **விடுதலை செய்தல்.** (வச. 170)

**11ம்** வசனத்திற்கு ஒரு D. L. Moody என்ற அறிஞர் இவ்வாறு விளக்கம் கொடுத்துள்ளார்“ வேதாகமம் ஒருவனைப் பாவத்திலிருந்து விலக்கிவைத்துக் கொள்ளும், அல்லது பாவம் ஒருவனை வேதாகமத்திலிருந்து விலக்கி வைத்துக் கொள்ளும்.

**71ம்** வசனம் சம்பந்தமாக கர்த்தர் எங்களை பல பிரச்சனைகளினால் துக்கப்படுத்துவது கர்த்தருடைய வார்த்தைகளை வாசித்து ஆறுதலடைவதற்காகும். சங்கீதம் 94 : 12 இவ்வாறு கூறுகிறது. “கர்த்தாவே துன்மார்க்கனுக்குக் குழிவெட்டப்படும்வரைக்கும்இ நீர் தீங்கு நாட்களில் அமர்ந்திருக்கப்பண்ணி சிட்சித்து உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான். “

எபிரேயர் புத்தகத்தின் எழுத்தாளர் **75ம்** வசனத்திற்கு நல்ல விளக்கம் தருகின்றார். (எபிரே. 12:5-15.)

**89ம்** வசனத்தைக்குறித்து கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்த்து கூறியதைப் பாருங்கள். “”வானமும் பூமியும் ஒழிந்துபோம்இ என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை”. (மத். 24:35). (மத். 5:18 1 பேதுரு. 1:23இ 25.)

**99ம்** வசனத்தைக்குறித்து சங்கீதக்காரன் தன்னுடைய மூளையின் வல்லமையைக் குறித்துமேன்மை பாராட்டாமல் இருக்கின்றார் கர்த்தருடைய சாட்சிகளாய் வாழ்பவர்களை அவதானிக்கின்றார். மனிதர்களுடைய ஆலோசனையிலும் கர்த்தருடைய வேதம் அதிக

ஆலோசனைகளைத்தருகின்றது என்று கூறுகின்றார். மனிதர்கள் தவறான ஆலோசனைகளையும் தருவார்கள். உதாரணமாக நாத்தான்வேல் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும்படி தாவீதை உற்சாகப்படுத்தினால், ஆனால் கர்த்தரோ அதை நிராகரித்தார். (1 நாளா. 17:1-4).

**105ம்** வசனத்தைக்குறித்து, சாத்தானும் ஒளியைப் போல பாசாங்கு செய்வான் என்று கூறுகிறார். ஆனால் அங்கு ஒரு வித்தியாசம் காணப்படும். கர்த்தருடைய வெளிச்சம் மனிதனுடைய கால்களுக்கு தீபமாக இருக்கும், அதாவது அவரது பார்வையை வழிநடத்தும். சாத்தானுடைய வெளிச்சம் மனிதனுடைய கண்களுக்கு எதிரான வெளிச்சமாக இருக்கும், அது அவனுடைய கண்பார்வையைக் குருடாக்கும். பரிசுத்த பவுல் இவ்வாறு கூறுகின்றார், “தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளிஇ அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்குஇ இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.” (2 கொரி. 4:4). (சங். 97:11.)

**130ம் வசனம் சம்பந்தமாக** கர்த்தருடைய வார்த்தையானது மந்தபுத்தியுள்ள விசுவாசிகளை ஆசீர்வதிக்கப் போதுமானதாகவும் இருக்கின்றது. இது குழந்தைகளுக்கு ஞானப்பாலாகவும், வளர்ந்தவர்களுக்கு மாமிச உணவாகவும் இருக்கின்றது.

## 38. சங்கீதம் 123

### தெரிவு செய்யப்பட்ட வசனம்: :

> பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரேஇ உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன். இதோ வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும் வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப் போலவும் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ் செய்யும்வரைக்கும் எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது.” (123:1இ 2).

### விளக்கம்::

நான் உனக்குப் போதித்துஇ நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு

ஆலோசனை சொல்லுவேன். வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம். (சங் 32:8இ 9)

**39. சங்கீதம் 136**

**தெரிவுசெய்யப்பட்டவசனம்**:

> "கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர்இ அவர் கிருபை என்றுமுள்ளது." (சங். 136:1).

**விளக்கம்**: இந்தச் சங்கீதம் அதிக இரக்கம் கொண்டதாகும். அவருடைய கிருபை என்றும் உள்ளது என்பது 26 தடவைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வசனத்திற்கும் ஒன்று உள்ளது. வேதாகமத்தில் உள்ள ஜெபங்களில் இரக்கமானது எப்போதும் தனிச்சிறப்பானதாக உள்ளது.

1. யாக்கோபின் ஜெபம் (ஆதி. 32:10)
2. ஆபிரகாமின் ஜெபம் (ஆதி. 24:27)
3. மோசேயினுடைய ஜெபம். (யாத். 15:13)
4. தாவீதினுடைய ஜெபம் (2 சாமு. 22:26 24:14)
5. மிகுதியாக இருந்தவர்களின் ஜெபம் (நெகே. 9:19)
6. யோனாவின் ஜெபம் (யோனா 4:2)
7. ஆயக்காரனின் (வரிவசூலிப்பவர்)ஜெபம் (லூக். 18:13)
8. மற்றய சங்கீதங்கள். (25:6 40:11 51:1 69:16 79:8 103:4 119:77 156 145:9)

**40. சங்கீதம்.139**

**தெரிவு செய்யப்பட்ட வசனம்** :

"கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்துஇ அறிந்திருக்கிறீர்." (139:1).

**விளக்கம்.**: தாவீதினுடைய சங்கீதங்களில் இதிலே தான் கர்த்தரின் எல்லையற்ற ஞானம் விளங்குகின்றது., வேதகமத்தில் வேறு எங்கும் இவ்வாறான ஜெபம் எங்கும் இல்லை. .

தாவீதின் பிரகாரம்.:

1. என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் கர்த்தர் அறிந்திருக்கிறார் (வச. 2).

2. என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறார்.(வச. 2).

3. கர்த்தர் அவருடைய பழக்கங்கள் யாவற்றையும் அறிந்திருக்கின்றார். (வச. 3).

4. கர்த்தர் அவரடைய ஒவ்வொரு வார்த்தையையும் அறிந்திருக்கின்றார். (வச. 4).

5. கர்த்தர் அவருடைய ஒவ்வொரு செயற்பாடுகளையும் அறிந்திருக்கின்றார். (வச. 5).

6. அவன் பிறப்பதற்கு முன்னமே அவனைக் கர்த்தர் அறிந்திருக்கின்றார். (வச. 16).

இந்த அற்புத ஞானத்திற்காக தாவீது கர்த்தருக்கு நன்றி செலுத்தினான்.

7. அவரை உருவாக்கினதற்காக (வச. 13-16).

**அவரைக் காத்து நடத்தியதற்காக.** .

(1) அவன் வானத்திற்கு ஏறினபோதிலும் (வச. 8).

(2) அவர் பாதாளத்திற்கு இறங்கினபோதிலும் (வச. 8).

(3) சமுத்திரத்தின் ஆழத்தில் இறங்கினபோதும். (வச. 9).

(4) இருளினால் இரவு முழுவதும் மூடியபோதும். (வச. 11. 12).

**அவரைப்பற்றி நினைத்த போதும். (வச. 17இ 18).**

**<u>தவறுகளுக்காக வருந்தும் சங்கீதங்கள்</u>.** **(6. 32. 38. 51. 102. 130. 143)** இவ்வாறான வருத்தம் தெரிவிக்கும் 7 சங்கீதங்களில் குறைந்தது 5 சங்கீதங்கள் தவீதினால் எழுதப்பட்டுள்ளன. அவர் எழுதியவை 6. 32. 38. 51. 143 என்பனவாகும். நாங்கள் கீழ்குறிப்பிடும் **மூன்று சங்கீதங்களைப் பார்ப்போம்** **32. 38. 51.**

1. **சங்கீதம்** 32 :- இந்த சங்கீதம் **51ம்** சங்கீதத்துடன் தொடர்பு கொண்டதாகும். விபச்சாரமும், கொலையும் செய்த பிற்பாடு தாவீதின் உணர்வுகளும் பாவமன்னிப்பும் இங்கு விபரிக்கப்படுகின்றன. (2சாமு. 11)இ இந்தச் சங்கீதம் பாவமன்னிப்பு செய்வதற்கு முன்னான நிலமையைச் சித்தரிக்கின்றது. (4:7இ 8) ரோமர் 4: 7-8 இவ்வாறு கூறுகின்றது. "எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோஇ அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான். வேதாகமத்திலுள்ள பெரிய கொள்கையை பரி.பவுல் இங்கு விளக்குகின்றார், அதுதான் உட்புகுத்தப்படல் என்பதாகும். உட்புகுத்தல் என்பது ஒருமனிதன் இன்னுமொரு மனிதனில் கணக்கில் சிலவிடயங்களைச் சேர்த்துக் கொள்ளுதலாகும். வேதாகமத்தில் மூன்றுவிதமான உட்புகுத்தல் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவையாவன.

1. ஆதாமுடைய பாவ சுபாவம் மனிதர்களின் மேல் உட்புகுத்தப்பட்டது. (ரோ. 3:23 5:12).

2. மனிதர்களின் பாவம் கிறிஸ்த்துவின்மீது உட்புகுத்தப்பட்டது. (ஏசா. 53:5இ 6 எபிரே. 2:9 2 கொரி. 5:14-21 1பேது. 2:24).

3. கிறிஸ்த்துவினுடைய நீதி பாவிகள் மீது உள்சுமத்தப்பட்டது. (பிலி. 3:9 யாக். 2:23ரோ.4:6-24).

2. **சங்கீதம்** 51

**இந்தச் சங்கீதத்தை தாவீது எந்தச் சந்தர்ப்பத்தில் எழுதினார் ஏற்கனவே என்பதை பார்த்துள்ளோம**

1. ஒரு பாவம் செய்த பரிசுத்தவான் எப்படி மனம்திரும்ப வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்த்தாரோ அப்படியான ஒரு ஆரம்பத்தையே தாவீது செய்தான். — தன்னுடைய பாவத்தை சுதந்திரமாக ஏற்றுக் கொண்டான். பிதா எங்களுடைய கண்ணீரை ஏற்றுக்

கொள்ளுவார், ஆனால் எங்கள் சாட்டுப் போக்குகளை ஏற்றுக் கொள்ளமாட்டார். தாவீது தன்னுடைய தோல்வியை சமூகத்தின் மீதோ, பரம்பரையைக் குறித்தோ, வறுமையைக் குறித்தோ, அல்லது, சூழலையோ குற்றம் சாட்டவில்லை.

2. நான்காம் வசனத்தில் அவர் தேவரீர் ஒருவருக்கு எதிராக நான் பாவம் செய்தேன் என்று கூறுகின்றார். இது உண்மையல்ல, ஏனெனில் தாவீது தனக்கு எதிராகவே பாவம் செய்தான், பத்சேபாளுக்கு எதிராகப் பாவம் செய்தான், உரியாவுக்கு எதிராகப் பாவம் செய்தான். தன்னை நேசிக்கும் அன்பான இஸ்ரவேலர்களுக்கு எதிராகப் பாவம் செய்தான்.

3. **7ம்** வசனத்தில் தாவீது தன்னை ஈசோப்பினால் சுத்திகரிக்கும்படி வேண்டுகிறார். சங்காரதூதன் கடந்து செல்லதற்காக இரத்தம் நிலைகளில் பூசுவதற்கு ஒருபிடி ஈசேப்புக் கொழுந்துகளினால் பூசப்பட்டதை தாவீது நினைவு கூருகின்றார். (யாத். 12:21-23). உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும் அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். (ஏசா. 1:18).

4. இன்று ஒருவரும் ஜெபிக்காத ஜெபத்தை தாவீது 11ம் வசனத்தில் “உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்இ உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும் என்று ஜெபம் செய்கின்றார். எங்கள் பாவத்தின் நிமித்தம் பரிசுத்த ஆவியானவர் எங்களைவிட்டு வெளியேறிவிடுவார் என்ற பயம் எப்போதும் எங்கள் உள்ளத்தில் இருத்தல் வேண்டும். நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன்இ அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோவான். 14:16).

5. தாவீது 12ம் வசனத்தில் என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவிஇ என் பாவமற என்னைச் சுத்திகரியும் என்று கூறியது போல நாங்களும் சல சமயங்களில் ஜெபிக்கவேண்டி ஏற்படும்.

எபேசு சபையைப்பர்த்து கர்த்தர் சொன்னதுபோல நாம் ஆதி அன்பை விட்டு விலகாமல் இருத்தல் வேண்டும். (வெளி. 2:4).

கர்தரிடம் நாம் மன்னிப்பு கேட்டு சுத்திகரிக்கப்பட்ட பிற்படு இயேசுவைப்பற்றி நாம் மற்றவர்களுக்கு உபதேசிக்கக்கூடியவர்களாகிவிடுவோம். (வசனம். 13)

க. பாவ அறிக்கை செய்யும் சங்கீதங்கள் பல பிரயோசமான உண்மைகளை வெளியே கொண்டுவருகின்றன., 16ம், 17ம் வசனங்களில் மிகப் பெரிய உண்மைகள் வெளிவருகின்றன. இதற்கான காரணம் மிகவும் இலகுவானது, விபச்சரப் பாவத்திற்காக எந்தவொரு பலியும் செலுத்தப்படுவதில்லை. ஆனால் பாவம் செய்தவர் வெளியே கொண்டு செல்லப்பட்டு கல்லெறிந்து கொல்லப்படல் வேண்டும். அதனாலேதான் தாவீது தன்னை கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் ஒப்புக் கொடுத்தார்.

3. **சங்கீதம் 38** முழு வேதாகமத்திலும் ஒரு சிறப்பான பகுதியாக இது இருக்கின்றது. வேறு எந்தக் காரணத்திற்குமாகவல்ல, இது மிகுந்த கிருபையுள்ளதாக இருக்கின்றபடியாலாகும். வேதாகமம் மனிதனால் எழுதக்கூடிய புத்தகமல்ல, மனிதர்களைப் பாவித்து பரிசுத்த ஆவியானவரால் எழுதப்பட்ட புத்தகமாகும். இங்கே நாம் தாவீதைப் கவனிப்போமானால், இவர் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவராக இருந்தார், இஸ்ரவேலின் இனிமையான பாடராக இருக்கின்றார், கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவராக இருக்கின்றார், ஆனாலும் அவருடைய இந்த ஜெபத்தைப்படிக்கும் போது, இந்த நோயிலிருந்து தப்புவது மிகவும் கஷ்டமானதாக இருக்கின்றது, தன்நடத்தையின் பயனாக ஏற்பட்ட நோயாகவே இது இருக்கின்றது. (வச. 3-11).

**<u>சாபமிடும் சங்கீதங்கள்.</u> (35. 55. 58. 59. 69. 83. 109. 137. 140)**

**இந்த சங்கீதங்களின் வரையறைகள்** : சாபமிடுவதற்காக ஒருவருக்கு எதிராக ஜெபம் செய்யதல், அல்லது மற்றவர்களுக்கு கேடு வர வேண்டும் என்று கர்த்தரிடம் கெஞ்சி மன்றாடுதலாகும்.

**இந்த சங்கீதத்தில் காணப்படும் சம்பவங்கள்**.

தன்னுடைய எதிரிக்கு நியாயத்தீர்ப்பு கிடைக்க வேண்டும் சங்கீதக்காரன் கர்த்தரை அழைப்பதற்கான உதாரணங்கள் பல உண்டு,

1. கர்த்தாவே நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி என்னோடு யுத்தம்பண்ணுகிறவர்களோடே யுத்தம் பண்ணும். (35:1)

2. என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் வெட்கப்பட்டுக் கலங்குவார்களாக (35:4)

3. அவர்கள் காற்றுமுகத்தில் பறக்கும் பதரைப்போலாவார்களாக (35:5)

4. கர்த்தருடைய தூதன் அவர்களைத் துரத்துவானாக.
.(35:5)

5. அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாயிருப்பதாக (35:6)

6. மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக (55:15)

7. அவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்குவார்களாக (55:15)

8. அவர்கள் பற்களை உடைத்துப் போடவீராக (58:8)

9. அவர்களுடைய பாதுகாப்புகளை வெட்டிப் போடுவீராக (58:7)

10. வஞ்சகமாய்த் துரோகஞ்செய்கிற ஒருவருக்கும் தயை செய்யாதேயும். (59:5)

11. அவர்களை உம்முடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும் (59:13)

12. அவர்களுக்கு கண்ணி வைப்பீராக (69:22

13. அவர்களுடைய கண்களைக் குருடாக்குவீராக (69:23)

14. அவர்கள் இடுப்புக்களைத் தள்ளாடப்பண்ணும். (69:23)

15. அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற்போவதாக. (69:25)

16. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக (69:28)

17. நிலத்துக்கு எருவாய்ப் போகச் செய்வீராகஇ (83:10)

18. அவர்களைத் துன்பப்படுத்துவீராக (83:14)

19. அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக் கொடுப்பீராக (109:6)

20. அவர்கள் நாட்கள் குறைவாக இருப்பதாக (109:8)

21. அவர்கள் குழந்தைகள் இரந்து திரிவார்களாக (109:10)

22. நெருப்புத்தழல் அவர்கள்மேல் விழுவதாக (140:10)

23. அவர்கள் எழுந்திருக்கக்கூடாத படுகுழிகளிலும் தள்ளப்படுவார்களாக. (140:10)

இந்தச் சங்கீதத்தில் காணப்படும் பிரச்சனைகள். இவ்வாறான பிரச்சனைகளுக்காக இயேசுவிடம் இருந்து ஒரு விடை மத்தேயு 5: 44 இல் கூறப்பட்டுள்ளது நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வ தியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களு க்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். மத்5:44

இந்த சங்கீதத்திற்காக கூறப்படும் விடைகள். .

1. சங்கீதங்கள் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டவைகள், பாவத்தையும் பாவியையும் பலர் அறியும்படி கூறப்பட்டுள்ளது.

2. இது நியாயப்பிரமாணத்திற்கு இணங்கிச் செல்கின்றது. (சங். 28:4 எரே. 50:15).

3. இவ்வாறான நியாயத்தீர்ப்புக்கள் அசுத்தத்திற்கும், அசுத்தங்களைச் செய்பவர்களுக்கும், இயேசுவின் போதனைகளுக்கும், நிருபங்களுக்கும் இசைந்து போகின்றது. மத். 18:6 23:33 26:24 கலா. 1:8. 9 5:12 யாக். 5:3 யூதா 13. 15 2 பேதுரு. 2:12, 22 2 தெச. 2:10-12 வெளி. 14:10, 11).

4 பாவத்திலும் விக்கிரக ஆராதனையிலும் விழும் இஸ்ரவேலர்களுக்கு சாபம் வரும் என்பதை வேதாகமம் கூறுகின்றது. (லேவி. 26 உபா. 27-28 ஏசா. 5:24 25 28:13)

5. தாவீது தனிப்பட்ட வாழ்க்கையில் மிகவும் துக்கத்தை அனுபவித்திருந்த போதிலும், சங்கீதங்களில் கர்த்தருடைய சாபத்தையே கூறுகின்றான். சங். 5:10இ 1.

6 அனேக சாபங்கள் காயப்பட்டவர்களுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் கூறப்பட்டவையாகும். (சங். 10:8-10).

7. சில சங்கீதங்கள் யுத்ததில் வெற்றி கொள்வதற்காக எறேடுக்கப்பட்ட ஜெபங்களாகும். (144:5-7). இஸ்ரவேலர்களின் அனேக யுத்தங்கள் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டவையாகும்

8. இவற்றில் சில விண்ணப்பங்கள் வேதாகம முன்னறிவித்தல்களுக்கு ஏற்ப இடம்பெற்றுள்ளன, (சங். 137:8இ 9). பாபிலோன் விழுந்து போகும் என்ற தீர்க்கதரிசனம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.(ஏசா. 13:16 எரே. 50:15 51:6இ 36).

9. சில சங்கீதங்கள் கிறிஸ்துவைப்பற்றியும் அவரைக் காட்டிக் கொடுப்பவர் பற்றியும் கூறப்பட்டுள்ளது. (சங்40 55 60). யூதாசுக்கு கொடுக்கப்பட்ட தண்டனை பற்றி சங்கீதம் 69:22-25 கூறுகின்றது. **சங்கீதம் 109 ஸ்கரியோத்து சங்கீதம்** என்று அழைக்கப்படுகின்றது.

10. சங்கீதத்தில் கொடுமையானவர்கள் என்று கூறப்பட்டவர்கள் உண்மையில் கொடுமையானவர்களேயாகும் அல்லது துரோகிகளாகும். அனேகமான சங்கீதங்கள் துரோகிகளின் இறுதி நியாயத்தீர்ப்பை எதிர்பார்க்கின்றன.

11. துரோகிகளுக்கான எச்சரிக்கை திரும்பத்திரும்ப இரக்கத்தின் நிமித்தம் கொடுக்கப்படுகின்றன. (சங்2:12).

**<u>இந்த சங்கீதங்களின் குறுகிய விளக்கத்தைப் பார்ப்போம்.</u>** :

1. **சங்கீதம்.** 35. ஒன்பது சாபச் சங்கீதங்களில் இதுவே முதலாவதாகும். (வசனம் 1-8.) இங்கு தாவீது தன்னுடைய எதிரிகளுக்காக ஜெபம் செய்கின்றார். (வசனம்12-16.)

இது நான்கு ஸ்கரியோத்து சங்கீதத்தில் முதலாவதாகும் இது யூதாசின் நம்பிக்கைத் துரோகத்தை தீர்க்கதரிசனமாக கூறுகின்றது.

**மற்றய மூன்று சங்கீதங்களும்.** : 41:9 55:12-14, 109:6-8.

**ஒவ்வொன்றிலும் கூறப்பட்டுள்ள சாப வார்த்தைகளைக் கவனிப்போம்.** :

2. **சங்கீதம்.** 55:9 ஆண்டவரேஇ அவர்களை அழித்து அவர்கள் பாஷையைப் பிரிந்து போகப்பண்ணும் கொடுமையையும் சண்டையையும் நகரத்திலே கண்டேன்

3. **சங்கீதம்.** 58:6-9 தேவனேஇ அவர்கள் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப்போடும் கர்த்தாவே பாலசிங்கங்களின் கடைவாய்ப்பற்களை நொறுக்கிப்போடும். கடந்தோடுகிற தண்ணீரைப்போல் அவர்கள் கழிந்துபோகட்டும் அவன் தன் அம்புகளைத் தொடுக்கும்போது அவைகள் சின்ன பின்னமாய்ப் போகக்கடவது. கரைந்துபோகிற நத்தையைப்போல் ஒழிந்து போவார்களாக ஸ்திரீயின் முதிராப் பிண்டத்தைப்போல் சூரியனைக் காணாதிருப்பார்களாக. முள் நெருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறுமுன்னே பச்சையானதையும் எரிந்துபோனதையும் அவர் சுழல்காற்றினால் அடித்துக்கொண்டுபோவார்.

4. **சங்கீதம்.** 59:11-15 அவர்களைக் கொன்றுபோடாதேயும் என் ஜனங்கள் மறந்துபோவார்களே எங்கள் கேடகமாகிய ஆண்டவரே உமது வல்லமையினால் அவர்களைச் சிதறடித்து அவர்களைத் தாழ்த்திப்போடும். அவர்கள் உதடுகளின் பேச்சு அவர்கள் வாயின் பாவமாயிருக்கிறது அவர்கள் இட்ட சாபமும் சொல்லிய பொய்யும் ஆகிய இவைகளினிமித்தம் தங்கள் பெருமையில் அகப்படுவார்களாக. தேவன் பூமியின் எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர் என்று அவர்கள் அறியும்பொருட்டு அவர்களை உம்முடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும் இனி இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கும். (சேலா.) அவர்கள் சாயங்காலத்தில் திரும்பிவந்து நாய்களைப்போல ஊளையிட்டு ஊரைச்சுற்றித் திரிகிறார்கள். அவர்கள் உணவுக்காக அலைந்து திரிந்து திருப்தியடையாமல் முறுமுறுத்துக்கொண்டிருப்பார்கள்.

5. **சங்கீதம்.** 69:22-28 அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும் அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக்கடவது. அவர்களுடைய கண்கள் காணாதபடி அந்த காரப்படக்கடவது அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும். உம்முடைய உக்கிரத்தை அவர்கள்மேல் ஊற்றும் உம்முடைய கோபாக்கினி அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக. அவர்கள் வாசஸ்தலம் பாழாகக்கடவது அவர்களுடைய கூடாரங்களில் குடியில்லாமற்போவதாக. தேவரீர் அடித்தவனை அவர்கள் துன்பப்படுத்தி நீர் காயப்படுத்தினவர்களை நோகப் பேசுகிறார்களே. அக்கிரமத்தின்மேல் அக்கிரமத்தை அவர்கள் மேல் சுமத்தும் அவர்கள் உமது நீதிக்கு வந்தெட்டாதிருப்பார்களாக. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக.

6. **சங்கீதம்.** 83:9-17 மீதியானியருக்குச் செய்தது போலவும் கீசோன் என்னும் ஆற்றண்டை எந்தோரிலே அழிக்கப்பட்டு நிலத்துக்கு எருவாய்ப்போன சிசெரா யாபீன் என்பவர்களுக்குச் செய்ததுபோலவும் அவர்களுக்குச் செய்யும். அவர்களையும் அவர்கள் அதிபதிகளையும் ஓரேபுக்கும் சேபுக்கும் அவர்கள் பிரபுக்களையெல்லாம் சேபாவுக்கும் சல்முனாவுக்கும் சமமாக்கும். தேவனுடைய வாசஸ்தலங்களை எங்களுக்குச் சுதந்தரமாக நாங்கள் கட்டிக்கொள்வோம் என்று சொல்லுகிறார்களே. என் தேவனே அவர்களைச் சுழல்காற்றின் புழுதிக்கும் காற்று முகத்தில் பறக்கும் துரும்புக்கும் சமமாக்கும். நெருப்பு காட்டைக் கொளுத்துவது போலவும் அக்கினி ஜுவாலைகள் மலைகளை எரிப்பது போலவும் நீர் உமது புசலினாலே அவர்களைத் தொடர்ந்து உமது பெருங்காற்றினாலே அவர்களைக் கலங்கப்பண்ணும். கர்த்தாவே அவர்கள் உமது நாமத்தைத் தேடும்படிக்கு அவர்கள் முகங்களை அவமானத்தாலே மூடும். யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின் மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி.

7. **சங்கீதம்.** 109:6-20

அவனுக்கு மேலாகத் துஷ்டனை ஏற்படுத்திவையும்இ சாத்தான் அவன் வலதுபக்கத்தில் நிற்பானாக. அவன் நியாயம் விசாரிக்கப்படும்போது குற்றவாளியாகக்கடவன் அவன் ஜெபம் பாவமாகக்கடவது. அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன். அவன் பிள்ளைகள் திக்கற்றவர்களும் அவன் மனைவி விதவையுமாகக்கடவர்கள். அவன் பிள்ளைகள் அலைந்து திரிந்து பிச்சையெடுத்து தங்கள் பாழான

இரந்துண்ணக்கடவர்கள். கடன் கொடுத்தவன் அவனுக்கு உள்ளதெல்லாவற்றையும் அபகரித்துக்கொள்வானாக அவன் பிரயாசத்தின் பலனை அந்நியர் பறித்துக் கொள்ளக்கடவர்கள். அவனுக்கு ஒருவரும் இரக்கங் காண்பியாமலும் அவனுடைய திக்கற்ற பிள்ளைகளுக்குத் தயவு செய்யாமலும் போவார்களாக. அவன் சந்ததியார் நிர்மூலமாகக்கடவர்கள் இரண்டாந்தலை முறையில் அவர்கள் பேர் அற்றுப்போவதாக. அவன் பிதாக்களின் அக்கிரமம் கர்த்தருக்கு முன்பாக நினைக்கப்படக்கடவது அவன் தாயின் பாவம் நீங்காமலிருப்பதாக. அவைகள் நித்தமும் கர்த்தருக்கு முன்பாக இருக்கக்கடவது அவர்கள் பேர் பூமியிலிராமல் நிர்மூலமாவதாக. அவன் தயை செய்ய நினையாமல் சிறுமையும் எளிமையுமானவனைத் துன்பப்படுத்தி மனமுறிவுள்ளவனைக் கொலைசெய்யும்படி தேடினானே. சாபத்தை விரும்பினான் அது அவனுக்கு வரும் அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமற்போனான் அது அவனுக்குத் தூரமாய் விலகிப்போம்.

சாபத்தை அவன் தனக்கு அங்கியாக உடுத்திக்கொண்டான் அது அவன் உள்ளத்தில் தண்ணீரைப்போலவும் அவன் எலும்புகளில் எண்ணெயைப் போலவும் பாயும். அது அவன் மூடிக்கொள்ளுகிற வஸ்திரமாகவும் நித்தமும் கட்டிக்கொள்ளுகிற கச்சையாகவும் இருப்பதாக. இதுதான் என்னை விரோதிக்கிறவர்களுக்குமஇ என் ஆத்துமாவுக்கு விரோதமாய்த் தீங்கு பேசுகிறவர்களுக்கும் கர்த்தரால் வரும் பலன்.

8. **சங்கீதம்.** 137. இது இரண்டு மடங்கு சாபமுள்ள சங்கீதம். :

1. பாபிலோனியர்களால் எருசலேம் வீழ்ந்த போதரோ நம்பிக்கைத் துரோகம் செய்த்தற்காக ஏதோமிற்கான நியாயத்தீர்ப்பு. (வசனம். 7).

2. கர்த்தர் பாபிலோனை நியாயம் தீர்த்தல். (வசனம். 8 9.)

இது பெர்சியா பாபிலோனியர்களை வெற்றி கொள்வதற்கான தீர்க்கதரிசனமாகும். (தானி. 5 ஏசா 13:16.). யாத்திரகாமம் **32:34** இல் கூறப்பட்டது போல். தெய்வீக கட்டளை பழிக்குப்பழிவாங்குதல் இங்கு சம்பத்தப்படுகின்றது

சங்கீதம் 7:16 நீதி 11:19இ 21 கலாத்தியர் 6:7. 9. சங்கீதம். 140. வசனம் 8-10 சாபத்திற்கான ஜெபமாக இருக்கிறது.

**உயர்விற்கான சங்கீதங்கள். இவற்றை எழுதியவர் யார் ?**

இவை மூன்று எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளன.

1. எசேக்கியா இவற்றில் பத்து சங்கீதங்களை எழுதியுள்ளார். (120. 121. 123. 125. 126. 128. 129. 130. 132. 134).

2. சாலொமோன் ஒரு சங்கீதத்தை எழுதியுள்ளார். (127).

3. தாவீது நான்கு சங்கீதங்களை எழுதியுள்ளார். (122. 124. 131. 133).

## இவை ஏன் எழுதப்பட்டன.?

கீழ்குறிப்பிடப்படும் விடயங்களுக்காக எழுதப்பட்டது என பலர் எண்ணுகிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா **கி. மு. 728 இல்** கர்த்தரால் மரணப்படுக்கையினின்று சுகமாக்கப்பட்டார். ஏசாயா 38ம் அதிகாரத்தில் இந்த பெரிய ராஜாவின் நன்றிகூறல் பதிவு செய்யப்பட்டுள்ளது, இதில் 20ம் வசனத்தில் கர்த்தர் என்னை இரட்சிக்க வந்தார் ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதிவைத்தான். இந்த சங்கீதங்கள் ஒத்த வடிவங்களைக் கொண்டவையாகும். இதில் எசேக்கியா 10 சங்கீதங்களை எழுதியுள்ளார்..

## இவை எப்படிப் பாடப்பட்டன ?

1. பழைய யூதர்களின் மரபுப்படி பாடல் குழுக்கள் அரை வட்டவடிவமாக ஆலயத்தின் ஏணிப்படிகளில் நின்று பாடப்பட்டன என்று கூறுகின்றார்கள்.

2. எருசலேமிற்கு யாத்திரையாகச் சென்று வருடாந்த பல பண்டிகைகளின் போதும் பாடப்பட்டதாக கூறுகின்றார்கள்.

3. பாடற்குழ உயர்ந்த இடங்களில் நின்று பாடினார்கள்.

## அல்லேலுயா சங்கீதங்கள். (113–118)

இந்த ஆறு சங்கீதங்களும் பஷ்காபண்டிகை நாட்களில் இரவில் பாடப்பெறும் சங்கீதங்களாகும்.

1. சங்கீதம் **113 ம் 114 ம்** உணவின் பரிமாற்ற ஆரம்பத்தில் பாடப்படுபவையாகும்.

2. சங்கீதம் **115 ம் 116 ம்** சாப்பாட்டின் முடிவில் பாடப்படுபவையாகும். இவைகள் இரட்சகராலும் அவருடைய சீடர்களாலும் மத்தேயு 26:30. இல் பாடப்பட்டதாக பதியப்பட்டுள்ளது. அவைகள் இன்றும் வருடத்திற்கு 21 முறை பாலஸ்தீனத்தில் பலவிதமான நிகழ்வுகளிலும் இசைக்கப்படுகின்றன, அத்துடன் பரிசுத்தநகரத்திற்கு வெளியேயுள்ள யூதர்களால் வருடத்திற்கு **21** தடவைகள் இசைக்கப்படுகின்றன.

**வரலாற்றுச் சங்கீதங்கள். (78. 105. 106)**

இந்த மூன்று சங்கீதங்களும் இஸ்ரவேல் சரித்திரத்தை தெளிவாக்க் கூறுகின்றது, அவற்றை கீழ்கண்டவாறு விபரிக்கின்றது.

**இஸ்ரவேலின் பாவம்.**

1. அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி நடக்க மறுத்தார்கள். (78:10).

2. அவர்கள் கர்த்தரின் கிரிகைகளை மறந்தார்கள். (78:11இ 42 106:13).

3. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பேசினார்கள். (78:19).

4. அவர்கள் கர்த்தருடைய இரட்சிப்பை நம்பவில்லை (78:22).

5. அவர்கள் கர்த்தருக்குப் பொய் சொன்னார்கள். (78:36).

6. அவர்கள் கர்த்தரை வேதனைப்படுத்தினார்கள். (78:40).

7. அவர்கள் கர்த்தரை மட்டுப்படுத்தினார்கள். (78:41).

8. அவர்கள் வரையப்பட்ட உருவங்களை வணங்கினார்கள். (78:58 106:19).

9. அவர்கள் தங்கள் தலைவனாகய மோசே மீது பொறாமை கொண்டார்கள். (106:16).

10. அவர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை இழிவாக எண்ணினார்கள். (106:24).

11. அவர்கள் தங்கள் கூடாரங்களில் இருந்து முறுமுறுத்தார்கள். (106:25).

12. ஜீவனில்லாதவைகளுக்கு இட்ட பலிகளைப் புசித்தார்கள். (106:28).

13. புறஜாதிகளுடனே கலந்து அவர்கள் கிரியைகளைக் கற்றுக் கொண்டார்கள். (106:35).

14. அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் பிசாசுகளுக்குப் பலியிட்டார்கள். (106:37).

15. குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தினார்கள் (106:38).

**கர்த்தருடைய கிருபை..**

1. கர்த்தர் உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். (105:8-11).

2. அவர் கடலைப்பிளந்தார். (78:13).

3. பகலிலே மேகத்தினால் அவர்களை வழிநடத்தினார். (78:14).
4. இராமுழுதும் அக்கினி வெளிச்சத்தினாலும் அவர்களை வழிநடத்தினார்.
5. கன்மலையிலிருந்து தண்ணீரைக் கொடுத்தார். (78:15).
6. மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணினார். (78:24).

7. அவரோ அவர்களை அழிக்காமல்இ இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார் (78:38).

8. அவர் எகிப்திலே தம்முடைய அடையாளங்கச் செய்தார். (78:43 105:27-36).

9. அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லைவரைக்கும்இ அழைத்துக்கொண்டுவந்தார் (78:54).

10. அவர்கள் முகத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்திவிட்டார்இ (78:55).

11. தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டார் (78:70இ 71).

12. அவர்களை ஒடுக்கும்படி ஒருவருக்கும் இடங்கொடாமலிருந்தார் (105:14).

13. அவர் அவர்களை போஷித்தார். (78:72).

14. அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்து கொண்டு:(105:14).

15. அவர் யோசேப்பிற்கூடாக அவர்களை மேம்படுத்தினார். (105:17).

16. எகிப்தின் செல்வங்களை அவர்களுக்கு கொடுத்தார். (105:37).

17. அவர்கள் யாவரையும் பலத்துடன் வைத்திருந்தார். (105:37).

18. அநேகந்தரம் அவர்களை மன்னித்து விடுவித்தார் (106:43).

19. அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்டார் (106:44).

**முதல் எழுத்துச் சங்கீதங்கள்.: (9. 10. 25. 34. 37. 111. 112. 119. 145)**

இந்த ஒன்பது சங்கீதங்களும் அகரவரிசைச் சங்கீதங்களாகும். இந்தச் சங்கீதங்கள் அகரவரிசைப்படி எபிரேய எழுத்துக்களின் 22 எழுத்துக்களுடன் தொடங்குகின்றன. **119ம்** சங்கீதம் பிரசித்தி பெற்ற முதல் எழுத்துச் சங்கீதமாகும். இது 22 பந்திகளைக் கொண்டது. ஒவ்வொரு பந்தியும் எட்டு வசனங்களைக் கொண்டது. மொத்தமாக 176 வசனங்களைக் கொண்டது. இந்த 22 பந்திகளும் முறைப்படி 22 எபிரேய எழுத்துக்களுடன் ஆரம்பிக்கின்றது.

எல்லாச் சங்கீதங்களும் 22 எழுத்துக்களுடன் தொடங்கவில்லை, சில எழுத்துக்கள் தவறவிடப்பட்டுள்ளன.

1. சங்கீதம் 9. 10. 25 அனேக எழுத்துக்கள் தவறியுள்ளன.

2.சங்கீதம் 34. 45 எல்லா எழுத்துக்களையும் கொண்டுள்ளன, ஆனால் ஒன்று குறைவு.

3. சங்கீதம் 37. 111. 112. 119. எல்லா எழுத்துக்களையும் கொண்டுள்ளன,

**மேசியாவின் சங்கீதங்கள்.**

இரண்டுவிதமாக இந்த சங்கீதங்களை வகுக்கலாம். **முதலாவதாக** புதிய ஏற்பாட்டில் கிறிஸ்த்து அவற்றை நிறைவேற்றியதன் பிரகாரமாகவும், **இரண்டாவதாக** சங்கீதப்புத்தகத்தில் அவை பதியப்பட்ட விதமாகவும். நாம் அவற்றை அவதானிக்கலாம். .

.

**புதிய ஏற்பாட்டில் கிறிஸ்த்து அவற்றை நிறைவேற்றியதன் பிரகாரமாகவும்**

1. **அவரது கீழ்ப்படிவு**. (40:6-10). பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல் என் செவிகளைத் திறந்தீர் இதோ வருகிறேன் புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன். (எபி.10:5-7).

2. **அவருடைய பக்தி** (69:9). "உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது" (யோவான்2:17).

3. **அவர் வெறுக்கப்படல்.** (118:22). "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று." (மத் 21:42).

4. **அவர் காட்டிக் கொடுக்கப்படல்.** "என் பிராண சிநேகிதனும் நான் நம்பினவனும் என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்." (41:9).

"என்னை நிந்தித்தவன் சத்துரு அல்ல அப்படியிருந்தால் சகிப்பேன் எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினவன் என் பகைஞன் அல்ல அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன். எனக்குச் சமமான மனுஷனும் என் வழிகாட்டியும் என் தோழனுமாகிய நீயே அவன். நாம் ஒருமித்து இன்பமான ஆலோசனைபண்ணி கூட்டத்தோடே தேவாலயத்துக்குப் போனோம்." (55:12-14). (மத்.26:14-16இ 21-25.)

5. **அவர் உபத்திரவப்படல்.** (22:1. 6. 7. 8. 16. 18). என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள் என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள். " (69:21). (மத். 27:34இ 48.) "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் சத்தியபரனாகிய கர்த்தாவேஇ நீர் என்னை மீட்டுக்கொண்டீர்.
(சங்கீ 31:5). (லூக்23:46.) "அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார் அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை." (34:20). (யோவான் 19:33-36 129:3.)

6. **அவருக்கான பொய்ச சாட்சிகள்.** “துன்மார்க்கனுடைய வாயும் கபட்டுவாயும் எனக்கு விரோதமாய்த் திறந்திருக்கிறது கள்ளநாவினால் என்னோடே பேசுகிறார்கள். பகையுண்டாக்கும் வார்த்தைகளால் என்னைச் சூழ்ந்துகொண்டு முகாந்தரமில்லாமல் என்னோடே போர் செய் கிறார்கள். ” (109:2இ 3). (மத். 26:59-61 27:39-44.)

7. **அவருடைய எதிரிகளுக்கான ஜெபம்**. என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள் நானோ ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். ” (109:4). (லூக்23:34.)

8. **அவருடைய உயிர்த்தெழுதல்**. “என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.” (16:10 அப்13:35). “உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.” (22:22 யோவான் 20:17).

9. **அவருடைய பரம் ஏறுதல்.** “தேவரீர் உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர் தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்.” (68:18 எபே 4:8).

10. **அவருடைய வெற்றிப் பிரவேசம்**. “வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள் அநாதி கதவுகளே உயருங்கள் மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர் அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே” (24:7, 8). (அப் 1.)

11. **அவருடைய பிரதான ஆசாரிய ஊழியம்.** “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார் மனம் மாறாமலுமிருப்பார்.” (110:4). (எபி. 5-7.)

12. **அவருடைய திருமணம்.** எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர் உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார். (45:2. 6. 8. 13. 15). (வெளி. 19.)

13. **அவர் புற ஜாதிகளை அழித்தல்.** “கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார். ”(சங் 110:1). (சங். 2.) “அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்” (110:6). (வெளி 6-19.)

14. **ஆயிரம் வருட அரசாட்சி** (89:27 102:16-21). "உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்." (8:6 எபி.2)."அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும் சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும் மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள். " (72:17). (மத் 23:39 வெளி. 11:15.)

**சங்கீதப் புத்தகத்தில் பதியப்பட்ட விதமாகவும் ஒழுங்கு முறையின் பிரகாரம்.**

1. **சங்கீதம்** 2: **முன்னறிவிக்கப்பட்ட மகா உபத்திரகாலத்தின் அழிவும், ஆயிரம்வருட அரசாட்சியும்**

**இந்த சங்கீதங்கள் நான்கு வகையாக வகுக்கப்பட்டுள்ளன**. :

1. **மனிதர்களின் ஆட்சி எதிர்ப்பு** (. 1-3)
2. **கர்த்தரின் எதிர்த்தாக்குதல்.** (4-6)
3. **குமாரனின் ஆளுகை** (7-9)
4. **சங்கீதக்காரனின் பரிந்துரைகள்**. (10-12)

**மேசியாவின் செய்திகள்.** :

**வசனம்** 2: "கர்த்தருக்கு விரோதமாகவும் அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: " (அப் 4:26.)
**வசனம்** 7: "தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன் கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன் " ( அப் 13:33.)

2. **சங்கீதம்** 8:

ஆயிரம் வருட அரசாட்சி பற்றி கூறுகின்றது. இந்த சங்கீதத்தின் 6ம் வசனத்தைக் கவனிப்போம். உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். **(வச. 6)** ஏசாய 53: 1. அதாவது கர்த்தருடையகரம் எங்களை இரட்சிக்கும். இது அதிக விலைக்கிரயம் கொடுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.

**மேசியாவின் செய்திகள்.: வசனம்.** 6: "உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்."

3. **சங்கீதம்** 16: இது கிறிஸ்த்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன்னறிவிக்கின்றது.

**மேசியாவின் செய்திகள்.: வசனம்** 10: **"**என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர் உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்." (அப் 2:27.)

4. **சங்கீதம்** 22: கிறிஸ்த்துவின் அதிக துன்பத்தை முன்னறிவிக்கின்றது.

**இந்த சங்கீதம் இரண்டு பகுதிகளாக வகுக்கப்படுகின்றது**.

1. **சிலுவை மரணத்தின் வேதனை.** (வச 1-21)

2. **(மகிமைப்படுத்தும்)** மேன்மைப்படுத்தும் பாடல். (வசனம்22-31) துன்பத்தின் பின்னும் கிடைக்கும் மகிமையைக் குறித்து இந்த வசனம் குறிப்பிடுகின்றது. கிறிஸ்த்துவானவர் எங்களுக்காக, தன்னுடைய உடலை அடிக்கவும், திரு இரத்தத்தைச் சிந்தவும் முழுச் சம்மதத்துடன் ஒப்புக் கொடுத்தார், அதனால் ஏற்பட்ட மகிமையைப்பற்றிய பாடலே இந்த வசனங்களாகும். 1 பேதுரு1:10, 11 இவ்வாறு கூறுகின்றது. உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள் தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும் அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.

**மேசியாவின் செய்திகள்.**: வசனம். 1: “என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும்இ நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்? ” (சிலுவையில் இயேசு கூறியவை. மத் 27:46.)

**வசனம்** 8: “கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானேஇ அவர் இவனை விடுவிக்கட்டும் இவன்மேல் பிரியமாயிருக்கிறாரேஇ இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள். ” (இஸ்ரேலிய ஆளுனர்களால் சிலுவையில் இயேசு தொங்கும் போது கூறப்பட்டவை. மத். 27:43.)

**வசனம்** 16: “என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.”
(ரோம போர்வீரர்களால் சிலுவையின் அடியில் நிறைவேற்றப்பட்டது. மத். 27:35.)

**வசனம்**18: “என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின்பேரில் சீட்டுப் போடுகிறார்கள். ” (ரோமபோர்வீரர்களால் சிலுவையின் அடியில் நிறைவேற்றப்பட்டது. மாற் 15:24.)

**வசனம்**22: “உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்துஇ சபைநடுவில் உம்மைத் துதிப்பேன்.” (எபி. 2:12.)

5. **சங்கீதம்** 23:

கிறிஸ்த்துவின் மேய்ப்பர் ஊழியத்தைப் பற்றிய முன்னறிவிப்பு.

**மேசியாவின் செய்திகள்** : வசனம் 1: “கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சி யடையேன்..” (புதிய ஏற்பாட்டில் இதற்கு ஒப்பான வார்த்தை இல்லாத போதும், கிறிஸ்த்து யோவான் 10:1-18 இல் கூறுகின்றார்.). இது சங்கீதத்தின் முத்து என்று அழைக்கப்படுகின்றது..

**இதில் மூன்று பகுதிகள் காணப்படுகின்றன.** :

1. ஆடுகளும் மேய்ப்பனும். (வசனம 1-3 உணவுப் பொருள்கள் பற்றி பேசுகின்றது.).

2. வழிப் போக்கனும் வழி காட்டியும் (வசனம் 3இ 4 வழிநடத்தல் பற்றி பேசுகின்றது.).

3. விருந்தளிப்பவரும், விருந்தாளியும் (வசனம் 5இ 6இ நல்ல தொடர்புபற்றி பேசுகின்றது.).

6. **சங்கீதம் 24:**

கிறிஸ்த்துவின் பரலோக வெற்றிப் பிரவேசம் பற்றி முன்னறிவித்தல். புதிதகக் கைப்பற்றப்பட்ட எருசலேமிற்குள் தாவீது வெற்றிப் பிரவேசம் செய்வதற்காக இந்தச் சங்கீதம் எழுதப்பட்டிருந்த போதிலும், இயேசு தன்னுடை வெற்றிகரமான இரட்சிப்பின் பணிகளை முடித்து ஒலிவ மலையிலிருந்து பரம் ஏறியதை விபரிப்பதாக இந்த சங்கீதம் அமைகின்றது. இந்தச் சங்கீதம்இரண்டு குழுவாகச் சேர்ந்து பாடப்படும்

வசனம் 1-6 எருசலேம் தங்கியிருக்கும் மலையின் அடிவாரத்தில் பாடப்படும்.

(1) **முதலாவது குழு** வசனம் 1-3 ஐப் பாடும்.

(2) **இரண்டாவது குழு** வசனம் 4-6ஐப் பதிலாகப் பாடும்.

**வசனம் 7-10 என்பன நகரத்தின் வாசலில் பாடப்படும்.**

(1) குழு A வசனம் 7ஐப் பாடும்.

(2) குழு B வசனம் 8ன் முதற்பகுதியைப் பாடும்.

(3) குழு A வசனம் 8ன் இரண்டாம் பகுதியைப் பாடும்.

(4) குழு A வசனம் 9ஐப் பாடும்

(5) குழு B வசனம் 10ன் முதற்பகுதியைப் பாடும்.

(6) குழு A வசனம் 10ன் இரண்டாம் பகுதியைப் பாடும்.

உ. **வாரத்தின் ஒவ்வொரு நாள் காலை ஆராதனையிலும் குறிப்பிட்ட சங்கீதங்கள்** :

(1) திங்கள் கிழமைகளில் 48 ம்சங்கீத்த்தை பாடற்குழு பாடும். .

மற்ய நட்களில் கீழ்குறிபுபிட் பிரகாரம் பாடப்படும். :

(2) செவ்வாய் இசங்கீதம். 82

(3) புதன்இசங்கீதம் 94

(4) வியாழன்இசங்கீதம் 81

(5) வெள்ளி சங்கீதம் 93

(6) சனி சங்கீதம் 92

(7) ஞாயிறு சங்கீதம் 24

**மேசியாவின் செய்திகள்**:

**வசனம்** 7-10: "வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள் அநாதி கதவுகளே உயருங்கள் மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர் அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே. வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள் அநாதி கதவுகளே உயருங்கள் மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். யார் இந்த மகிமையின் ராஜா? அவர் சேனைகளின் கர்த்தரானவர் அவரே மகிமையின் ராஜா. (சேலா.)." (அப் 2:32, 33.)

7. **சங்கீதம் 31**:

**இரட்சகர் சிலுவையில் பேசிய வார்த்தைகளை முன்னறிவிக்கின்றது**.

**மேசியாவின் செய்திகள்**: **வசனம்** 5: "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் " (இது இயேசுவால் கல்வாரியில் அவரது மரணத்திற்கு முன்பு பேசப்பட்டது. லூக். 23:46.)

8. **சங்கீதம்** 40: கிறிஸ்த்து பூமியில் இருக்கும் காலத்தில் அவருடைய கீழ்ப்படிதலை முன்னறிவிக்கின்றது.

**மேசியாவின் செய்திகள்**: வசனம் 6: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல் என் செவிகளைத் திறந்தீர்

சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை.
(எபி10:5இ 6.) வசனம் 7: “அப்பொழுது நான்: இதோ வருகிறேன் புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது ” (எபி. 10:7.)

9. **சங்கீதம்** 41: யூதாசினால் இரட்சகர காட்டிக் கொடுக்கப்படுவதை முன்னறிவிக்கின்றது.. நம்பிக்கைத் துரோகம் இடம் பெறும் என்று கூறும் மூன்று சங்கீதங்களில் இதுவே முதலா வதாகும். மற்றவைகள் 55ம், 109 ம் ஆகும்.

வசனம் 9: “என் பிராணசிநேகிதனும் நான் நம்பினவனும்இ என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும்இ என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.” (யோவான். 13:18.)

10. **சங்கீதம்** 45: இது கிறிஸ்த்துவின் அழகு பற்றியும் அவரது திருமணம் பற்றியும் முன்னறிவிக்கின்றது.

எகிப்திய பெண்ணை சாலொமோன் திருமணம் செய்த விடயம் சம்பந்தமாக இந்தச் சங்கீதம் கூறுகின்றது, (1 ராஜா. 3:1), ஆனால் கிறிஸ்த்துவின் திருமணம் சம்பந்தமாக வெளி. 19: 7-9 பகுதியையும இந்தச் சங்கீதம் கொண்டுள்ளது.

இந்த சங்கீதம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

அ. பகுதி ஒன்னு. : மணமகனுக்கு இருக்க வேண்டிய பகுதிகள். (1-8).

(1) எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்

(2) உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது

(3) தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார்.

(4) சத்தியம், தாழ்மை, நீதி என்பவற்றைக் காத்துக் கொள்கிறார்.

(5) அவர் எதிரிகள் யாவரையும் வெற்றி கொள்கிறார்.

(6) அவருடைய சிங்காசனம் என்றென்றும் இருக்கும்.

(7) நீதி அவருடைய செங்கோலாக இருக்கின்றது.

(8) அவர் நல்லதை விரும்புகிறார், கெட்டதை வெறுக்கிறார்.

(9) உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளம் சந்தனம் லவங்கம் இவைகளின் வாசனை பொருந்தியதாயிருக்கிறது.

b. **பகுதி இரண்டு** : மணப்பெண்ணுக்கு இருக்க வேண்டிய சிறப்புரிமைகள். (8 -17).

(1) தந்தத்தினால் செய்த அரமனையில் இதமான சங்கீதம் நிறைந்த மாளிகையில் வாசம்பண்ணுகிறாள்.

(2) ராஜஸ்திரீ ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் உமது வலதுபாரிசத்தில் நிற்கிறாள்.

(3) அவள் மணவாளனால் நித்தியமாக நேசிக்கப்படுவாளாக.

**மேசியாவின் செய்திகள்**: வசனம் 6: "தேவனேஇ உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது." (எபி1:8.) வசனம் 7: "நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறீர் ஆதலால் தேவனே உம்முடைய தேவன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்.." (எபி. 1:9.)

11. **சங்கீதம் 68:**

கிறிஸ்துவினுடைய மகிமையான வெற்றிபற்றியும், பரலோகத்திற்கான வெற்றிப் பிரவேசமும் முன்னறிவிக்கப்படுகின்றது.

**மேசியாவின் செய்திகள்**: வசனம் 18: தேவரீர் உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர் தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர். " (எபே. 4:8.)

கல்வாரிக்கு முன்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட நீதிமான்களின் இருப்பிடம் எதுவாகும்? இயேசுக் கிறிஸ்த்துவின் மரணத்திற்கு முன்பாக மரித்த நீதிமான்களின் இருப்பிடம் **கோதீஸ்** *Hades* என்று புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. **சீயோல்** *Sheol* என்று பழைய

ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. கேதீசில் ***Hades*** இரண்டு இடங்கள் காணப்படுகின்றன அதில் ஒன்று இரட்சிக்கப்பட்டவர்களுக்குரியது, மற்றது இரட்சிக்கப் படாதவர்களுக்கானதாகும். . இரட்சிக்கப்பட்டவர்களுடைள பகுதி பரதீஸ் என்று அடைக்கப்படும். (லூக் 23:43)இ ஆனால் இன்னுமொரு இடத்தில் ஆபிரகாமின் மடி என்றும் கூறப்பட்டுள்ளது. (லுக். 16:22). இரட்சி க்கப்படாதோர் செல்லும் இடம் காதேஸ்*Hades* என்று மட்டுமே குறுப்பிடப்படுகின்றது. செல்வந்தன் மரித்து இரட்சிக்கப்படாதோர் செல்லும் இடத்திற்குச் சென்றான் என்று லுக்16:19-31 கூறுகின்றது. ஆனால் கிறிஸ்த்து சிலுவையில் விசுவாசிகளின் பாவத்திற்காக மரித்தபிற்பாடு இந்த நிலை மாறியுள்ளதாக விசுவாசிகள் கருதுகின்றார்கள்.

12. **சங்கீதம்** 69: கிறிஸ்த்துவினுடைய துன்பங்கள் பற்றி முன்னறிவிக்கின்றது.

**மேசியாவின் செய்திகள்**: வசனம் 9: “உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது” (யோவான் 2:17.) வசனம் 21: “என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள். ” ( நிறைவேற்றப்பட்டது. மத். 27:34இ 48.)

13. **சங்கீதம்** 72:

இது கிறிஸ்த்துவினுடைய ஆயிரம் வருட அரசாட்சியை முன்னறிவிக்கின்றது. இந்த சங்கீதம் சாலொமோன் கர்த்தரிடம் ஏறெடுத்த ஜெபமாகவும் இருக்கலாம் அல்லது சாலொமோனுக்காக தாவீது மேற் கொண்ட ஜெபமாகவும் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இது எப்படி இருந்தாலும், தாவீதின் குமாரனுடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்த்துவினுடைய ஆயிரம் வருட அரசாட்சியை விபரிக்கின்றது. **அவருடைய ஆட்சியில் இடம்பெறும் முக்கிய விடயங்களாவன்.**

*a.* வறுமைப்பட்டோர் நீதியைப் கொள்வார்கள் (வச 2).

*b.* பர்வதங்களும் மலைகளும் செழிப்படையும். (வச. 3).

*c.* இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார். (வச4).

*d.* அவருடைய ராஜ்ஜியம் மிகவும் சிறப்பானதாகவும், கனிகளுள்ள ராஜ்ஜியமாகவும் தொல்லைகளற்ற ராஜ்ஜியமாகவும் இருக்கும். (வச. 6).

*e.* எல்லா நீதிமான்களும் செழிப்பார்கள். (வச 7).

*f.* அவருடைய ராஜ்ஜியம் பூமியில் கடைசிவரை இருக்கும். (வச8).

*g.* எல்லா தேசத்தாரும் காணிக்கைகளைக் கொண்டுவந்து கர்த்தரை ஆராதிப்பார்கள். (எள. 10இ 11).

*h.* மக்கள் யாவரும் கர்த்தரை துதித்து ஆரவாரிப்பார்கள். (வச 15).

*i.* அவருடைய நாமம் எப்போதும் கனப்படுத்தப்பட்ட தொடர்ந்து மகிமப்படுத்தப்படும். (எ. 17).

**மேசியாவின் செய்திகள்**: **வசனம்** 8: "ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்." (வெளி. 11:15.)

**14. சங்கீதம் 89:**

தாவீதின் அரசாட்சிக் காலத்தில் கீழ்ப்படியாமை இருந்த போதிலும், கர்த்தருடைய மாறாத பற்றுறிதியை முன்னறிவிக்கின்றது, இந்த சங்கீதம் சாலமோனுடைய ஆட்சிக் காலத்தில் ஏத்தான் என்பவரால் எழுதப்பட்டது.(1 ராஜா. 4:31).

**மேசியாவின் செய்திகள்**: வசனம் 27: "நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப்பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன். " (பிலி.2:9-11.) பரிசுத்த பவுல் இவ்வாறு கூறுகின்றார்.: "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்". (பிலி. 2:9-11.)

15. **சங்கீதம்.** 102: இது கர்த்தருடைய நித்தியத்தைப் பற்றிக் கூறுகின்றது. இந்தச் சங்கீதம் பாபிலோனிய சிறையிருப்பின் முடிவு காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம், அத்துடன் யூதர்களை உற்சாகப்படுத்தவும், எருசலேமைப் புதுப்பித்துக் கட்டவும் உற்சாகப்படுத்தும் நோக்கம் கொண்டிருக்கின்றது. இது எருசலேமின் பெரிய ராஜாவாக கர்த்தருடைய இரண்டாம் வருகையையும் எதிர்வு கூறுகின்றது ( வசனம் 16.)

**மேசியாவின் செய்திகள்**: வசனங்கள் 25–27 :- நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர் வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர் அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம் அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர் உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை. (எபிரே. 1:10-12.)

16. **சங்கீதம்** 109:. யூதாசின் காட்டிக் கொடுப்பனவுபற்றியும், அதன் பயங்கரமான தண்டனை பற்றியும் கூறுகின்றது.

**மேசியாவின் செய்திகள்.**: வசனம் 8: “அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன். ” (அப்போஸ்தல நடபடியில் பேதுருவால் கூறப்பட்டது.1:20.)

17. **சங்கீதம்** 110: கிறிஸ்த்துவின் நித்திய ஆசாரி ஊழியம் பற்றிக் கூறுகின்றது.

**ஐந்துவிதமான நிலைகள்.**

சங்கீதங்களில் கிறிஸ்த்துவின் நிலைகள்.

(1) அவர் கர்த்தராய் இருக்கிறார். (வச 1).

(2) அவர் ராஜாவாக இருக்கிறார். (வச2).

(3) அவர் ஆசாரியராக இருக்கிறார். (வச. 4).

(4) அவர் நியாயாதிபதியாக இருக்கிறார். (வச. 6).

(5) அவர் யுத்தவீர்ராக இருக்கிறார். (வச. 6).

**மேசியாவின் பகுதிகள்.** :

வசனம் 1. : நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் கூறினார். இந்தப்பகுதி புதிய ஏற்பாட்டிலும் அனேக இடங்களிலும் கூறப்பட்டுள்ளன, அதே போல பழைய ஏற்பாட்டிலும் கூறப்பட்டுள்ளன.

(3) மத்தேயு 22:41-46 (கிறிஸ்த்துவின்தெய்வீகத் தன்மையைக் குறிப்பிடுகின்றது.).

(4) அப்போ 2:34இ 35 (கிறிஸ்த்துவின் அடையாளத்தை குறிக்கின்றது.).

(5) எபிரேயர் 1:13 (கிறிஸ்த்துவின் மேம்பட்ட நிலையைக் குறிக்கின்றது).

(6) எபிரேயர் 10:12இ 13 (கிறிஸ்த்துவின் இறுதிச் செயற்பாட்டைக் குறிக்கின்றது. ). வசனம்.:4. “நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார் மனம் மாறாமலுமிருப்பார். “ இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் மூன்றுமுறைக்கு குறையாமல் கூறப்பட்டுள்ளது.

(7) எபிரேயர் 5:6 (பிரதான ஆசாரியருக்கு இருக்க வேண்டிய தகமைகள் பற்றிக் கூறுகின்றது.).

(8) எபிரேயர் 6:20 (பிரதான ஆசாரியரின் மாறாத இயல்பு பற்றிக் கூறுகின்றது.).

(9) எபிரேயர் 7:21 (பிரதான ஆசாரியரின் தேவைபற்றி குறப்பட்டுள்ளது.).

18. **சங்கீதம்** 118: கர்த்தருடைய கட்டிடத்தில் கிறிஸ்த்து பிரதான மூலைக்கல்லாக இருக்கிறார் என்பதை விளக்குகின்றது, மனிதர்களால் தள்ளப்பட்டவராகவும் கர்த்தரால் தெரிவு செய்யப்பட்டவராகவும் இருக்கிறார். இந்தச் சங்கீதம் கூடாரப்பண்டிகை நாட்களில் அடிக்கடி பாடப்படும், இரட்சகர் கெத்சமெனே நோக்கிப் பிரயாணம் செய்யும் போதும் பாடப்படும், மேசியாவின் பகுதியாக வசனம் 22 இருக்கின்றது. "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று." இது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பிரதான கல்லாகும். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கீழ்கண்டவாறு கூறப்படுகின்றது

a. இது மூலைக்கல்லாக இருக்கின்றது. (மத் 21:42 எபேசி. 2:20).

b. இது தலைக்கல்லாக இருக்கின்றது. (சகரியா. 4:7 அப் 4:11).

c. இது அடிக்கப்பட்ட கல்லாக இருக்கின்றது. (1கொரி10:4).

d. இது தடுக்குக் கல்லாக இருக்கினது (1கொரி 1:23).

e. இது நொறுக்கும் கல்லாக இருக்கிறது. (தானி. 2:34).

f. இது ஜீவனுள்ள கல்லாகவும், தெரிவு செய்யப்பட்ட கல்லாகவும், விலையுயர்ந்த கல்லாகவும் இருக்கின்றது. (1பேதுரு. 2:4-7). வசனம் 26: "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் (வெற்றிபவனிக்காக வரும் போது கூறப்பட்ட வார்த்தை மத். 21:9.)

## சில சங்கீதங்களின் தலைப்புக்கள் கீழே கூறப்படுகின்றன.

1. கர்த்தருடன் வாழ்பவர்களின் சங்கீதம் (1)
2. படைப்பு பற்றிய சங்கீதம் (8, 104)
3. நல்ல மேய்ப்பன் பற்றிய சங்கீதம் (22)
4. பெரிய மேய்ப்பன் பற்றிய சங்கீதம் (23)
5. பிரதான மேய்ப்பன் பற்றிய சங்கீதம் (24)

6. ஒற்றுமையின் சங்கீதம் (133)

7. எருசலேம் பற்றிய சங்கீதம் (48, 122, 126, 132, 137)

8. குடும்ப சங்கீதம் (127, 128)

9. பாதுகாப்புக்கான சங்கீதம் (121)

10. உண்மையான கர்த்தர் பற்றிய சங்கீதம் (115)

11. யாத்திரை பற்றிய சங்கீதம் (114)

12. அடைக்கலத்திற்கான சங்கீதம். (46)

13. விசுவாசத்தின் ஏணி பற்றிய சங்கீதம். (37)

14. சிறப்பான துதிபற்றிய சங்கீதம் (103, 148, 150)

15. வயோதிப காலத்திற்கான சங்கீதம். (71)

16. பழைய நூறாவது சங்கீதம் (100)

17. மரணத்திற்கான சங்கீதம் (90)

18. வாழ்க்கையின் சங்கீதம் (91)

19. விடுதலையின் சங்கீதம் (31, 116)

20. கர்த்தருடைய வீட்டிற்கான சங்கீதம் (84)

21. கர்த்தருடைய செல்வத்திற்கான சங்கீதம் (50)

22. கர்த்தருடைய வார்த்தைக்கான சங்கீதம் (19இ 119)

23. கர்த்தருடைய சத்தத்திற்கான சங்கீதம். (29)

24. கர்த்தருடைய இரக்கத்திற்கான சங்கீதம் (136)

25. கர்த்தருடைய நன்மைகளுக்கான சங்கீதம். (27இ 107)

26. எல்லாம் அறிந்தவரும் எங்கும் நிறைந்தவருமான கர்த்தருக்கான சங்கீதம். (139)

27. எல்லையற்ற சக்தியுள்ள கர்த்தருக்கான சங்கீதம் (147)

28. தாவீதின் உடன்படிக்கைக்கான சங்கீதம் (89)

29. இஸ்ரவேலர்களின் வரலாற்றுச் சங்கீதம். (78இ 105இ 106)

30. ஏன் என்ற கேள்விக்கான சங்கீதங்கள். (42இ 73)

31. நம்பிக்கை இழந்த நிலையில் பாடும் சங்கீதம். (69இ 88)

| சங்கீதம் | |
|---|---|
| **புத்தக வகையிலான பிரிவு** | |
| **அதிகாரங்கள்** | **பஞ்சாகமத்துடன் எப்படி ஒத்துப் போகின்றது** |
| 1-41 | திறவுகோல் வார்த்தைமனிதன் (ஆதியாகமத்துடன் தொடர்பு டையது.) |
| 42-72 | திறவுகோல் வார்த்தை விடுதலை (யாத்திரகாமத்துடன் தொடர்புடையது) |
| 73-89 | திறவுகோல் வார்த்தை புகலிடம் (லேவியர் ஆகமத்துடன் தொடர்புடையது) |
| 90-106 | திறவுகோல் வார்த்தை அலைச்சல், இளைப்பாறுதல் இன்மை (எண்ணாகமத்துடன் தொடர்புடையது ) |
| 107-150 | திறவுகோல் வார்த்தை: கர்த்தருடைய வார்த்தை (உபாகமத்துடன் தொடர்புடையது) |
| **விடயம் சம்பந்தமான வகைகள்** | |
| **விடயம்** | **சங்கீதங்கள்.** |

| | |
|---|---|
| பக்தியூட்டும் சங்கீதங்கள். | 6, 32, 38, 51, 102, 130, 143 |
| சாபமிடும்சங்கீதங்கள்.: | 35, 55, 58, 59, 69, 83, 109, 137, 140 |
| உயர்விற்கான சங்கீதங்கள். | 120-134 |
| அல்லேலுயா சங்கீதங்கள் | 113-118 |
| சரித்திர சங்கீதங்கள் | 78, 105, 106 |
| முதல் எழுத்துச் சங்கீதங்கள்.: | 9, 10, 25, 34, 37, 111, 112, 119, 145 |
| மேசியாபற்றிய சங்கீதங்கள்.: | 16, 22, 24, 31, 34, 40, 41, 45, 55, 68, 69, 89, 102, 109, 110, 118, 129 |

| எழுத்தாளர்கள் பிரிவு | |
|---|---|
| எழுத்தாளர் | சங்கீதம் |
| தாவீதின்: 77 | **மேய்பனின் சங்கீதம்**—8, 19, 23, 29, 144<br>**பாவிகளின் சங்கீதம்**—32, 51, 38<br>**துன்பப்படும் சங்கீதம்** —<br>3, 4, 5, 6, 7, 11, 12, 13, 14, 17, 22, 25, 26, 27, 28, 31, 34, 35, 39, 40, 41, 53, 54, 55, 56, 57, 58, 59, 61, 62, 63, 64, 69, 70, 86, 109, 140, 141, 142, 143<br>**திருப்திப்படும் சங்கீதம்** —<br>2, 9, 15, 16, 18, 20, 21, 24, 30, 36, 37, 52, 60, 65, 68, 72, 95, 101, 103, 105, 108, 110, 122, 124, 131, 133, 138, 139, 145 |
| கேரா: 10 | 42, 44, 45, 46, 47, 48, 49, 64, 85, 87 |
| ஆசாப்: 12 | 50, 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83 |
| கேமான் : 1 | 88 |
| ஈதான்: 1 | 89 |
| சாலமோன்: 1 | 127 |
| மோசே: 1 | 90 |
| எசேக்கியா: 10 | 120, 121, 123, 125, 126, 128, 129, 130, 132, 134 |
| எழுதியவர் தெரியாதவை: 37 | 1, 10, 33, 43, 66, 67, 71, 91, 92, 93, 94, 96, 97, 98, 99, 100, 102, 104, 106, 107, 111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 135, 136, 137, 14 |

| | |
|---|---|
| | 6, 147, 148, 149, 150 |

1. **மேசியாபற்றிய சங்கீதங்கள்.:**

| சங்கீதக் குறிப்பு | கிறிஸ்த்துவைப் பற்றிய விபரிக்கப்பட்ட குறிப்பு | புதிய ஏற்பாட்டில் நிறைவு செய்யப் பட்டவை. |
|---|---|---|
| 40:6-10 | **அவருடைய கீழ்ப்படிதல்** | எபிரேயர் 10:5-7 |
| 69:9 | அவருடைய பக்தி | யேவான் 2:17 |
| 118:22 | அவர் நிராகரிக்கப்படல் | மத்தேயு 21:42 |
| 41:9; 55:12-14 | அவர் காட்டிக் கொடுக்கப்படல் | மத்தேயு 26:14-16, 21-25 |
| 22:1, 6-8, 16, 18; 31:5; 34:20; 69:21; 129:3 | அவருடைய உபத்திரபவம் | மத்தேயு 27:34, 48 லூக் 23:46 யேவான் 19:33-36 |
| 109:2, 3 | அவருக்கு எதான பொய்ச்சாட்சிகள் | மத்தேயு 26:59-61 27:39-44 |
| 109:4 | அவன் தன்னுடைய எதிரிகளுக்காக ஜெபம் செய்தல். | லூக் 23:34 |
| 16:10 | அவருடைய உயிர்த்தெழுதல். | அப்போ 13:35 |
| 68:18 | அவர் பரம் ஏறுதல் | எபேசியன் 4:8 |
| 24:7, 8 | அவர் மகிமைக்குள் பிரவேசித்தல். | பிலிப்பியன் 2:9-11 |
| 110:4 | அவருடைய பிரதான ஆசாரிய ஊழியம் | எபிரேயர் 5-7 |
| 45:2, 6, 8, 13, 15 | அவருடைய சபையின் துருமணம் | வெளிப்ப19:7-10 |
| 110:1, 6 | புறஜாதிகளின் அழிவு | வெளிப்ப 6-19 |
| 89:27; 102:16-21; 72:17 | அவருடைய ஆயிரம் வருஷஅரசாட்சி | மத்தேயு 23:39 வெளிப்ப 11:15 |

உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்?
உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?
நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்
நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும்இ நீர் அங்கேயும்

இருக்கிறீர்.
நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து,
சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,
அங்கேயும் உமது கை என்னை நடத்தும்,
உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். சங்கீதம் 139:7-10

**நன்றி இயேசுவே**

**திராணி**